நகைகள் முறைதக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு

அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11,
தொலைபேசி: 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6506 1990 ஜூன் 5 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO 11.
Phone: 422839 434238


வடக்கு கிழக்கு

# மா. சபை ஆளுநருக்கு எதிராக வழக்கு தொடர -ஆலோசனை-

## உறுப்பினர்களுக்கு 3 மாத சம்பளம் வழங்கவில்லையாம்

### எவரும் பதவி இழக்கவில்லை என சுட்டிக்காட்டு

— எம் ஐயூப் —

கொழும்பு, ஜூன் 4

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எவரும் பதவி இழக்கவில்லை. அவர்களுக்கு கடந்த 3 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. இது ஒரு பாரபட்சமான நடவடிக்கை. எனவே ஆளுநருக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழக்குத் தொடர ஆலோசித்து வருகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜனாப் எம். எச். சேகு இஸ்ஸதீன் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மார்ச் மாதம் 1 ஆம் திகதிக்குப் பின்னர் மாகாண சபை கூடவில்லை.

அது மாகாண சபை உறுப்பினர்களின் தவறல்ல. மாகாண சபையின் தலைவரே சபையை கூட்ட வேண்டும். அப்படி இல்லா விட்டால், ஆளுநர் சபையை கூட்ட வேண்டும்.

மறுபுறத்தில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஏன் சம்பளம் வழங்கப்படுவதில்லை



கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை தமிழ் மொழி தின விழா தொடர்பாக கல்வி ராஜாங்க அமைச்சரும், வன்னி மாவட்ட ஐ தே க நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி ராஜ மனோகரி புலேந்திரன் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையில் எடுக்கப்பட்ட படம். தமிழ் பிரிவின் பணிப்பாளர் திரு வெ சபாநாயகம், பிரதம கல்வி அதிகாரி திருமதி சொர்ணவதி மாசிலாமணி ஆகியோரையும் படத்தில் காணலாம். (உ-ம)

[படம்— தம்மிக்க நிமலசூரிய]

# 30 தங்க பதக்க பரிசுகள் தமிழ்மொழிதினப்போட்டியில்

— ராஜமனோகரி

கொழும்பு, ஜூன் 4

அகில இலங்கை தமிழ் மொழி தின விழா இறுதிப் போட்டிகள் கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும். வெற்றிபெற

அமைச்சரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற (ஐ தே க) உறுப்பினருமான திருமதி ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் தமிழ்மொழி தின விழா கொழும்பில் நடைபெற

மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது:

வடக்கு கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலும் பேச்சு,

## ஈராக்—இலங்கை கலாசார ஒப்பந்தம்

### துரிதமாக செயற்படுத்தப்படும்

கொழும்பு, ஜூன் 4

ஈராக்குக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார ஒப்பந்தம் துரிதமாகச் செயற்படுத்தப்படும்.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள ஈராக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழும்பு, ஜூன் 4

நாடாளுமன்றம் இன்று காலை 9 மணிக்குக் கூடும்.

உள்ளூராட்சி மன்றங்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்ட வரைவு மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்ட வரைவு ஆகியன இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. (உ-ம)

## ஹஜ் யாத்திரை: மூளைக் காய்ச்சல் தடுப்பூசி அவசியம்

கொழும்பு, ஜூன் 4

ஹஜ் யாத்திரை மேற்கொள்வோர் மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள வேண்டும்.

சுகாதார அமைச்சு ஹஜ் யாத்திரிகர்களுக்கு இப்படி

[2ஆம் பக்கம் பார்க்க]



# ரூபவாஹினி மீது மாசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கண்டி ஜூன் 4

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம இந்நாட்டு பௌத்த இந்து இஸ்லாமிய மக்களை நையாண்டி செய்யும் வகையில் சில நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது என்று மத்திய மாகாண சபையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபையின் இரண்டாவது தொடர் கூட்டத்தில் ஆளுநரின் கொள்கை விளக்கு உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டத்தரணி ஜனாப் . எம பாருக்கே [ஸ்ரீ ல மு கா] மேற்கண்ட குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

கூட்டம கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் பிரதித் தலைவர் திரு பீட்டர்

(2 ஆம பக்கம பார்க்க)

பளம வழங்கப்படுவதில்லை என்பதற்கு உரிய அதிகாரிகள் எவ்வித காரணத்தையும இது வரை தெரிவிக்கவில்லை.

ஏனைய மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கும, அவர்களின் மெய்ப் பாதுகாவலர்களுக்கும முறைப்படி சம்பளம வழங்கும போது, வட

(2 ஆம பக்கம பார்க்க)

வோருக்கு 30 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும. போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வரும பாடசாலை மாணவர்களுக்கு கொழும்பில் உணவு, தங்குமிட வசதிகளுடன் போதிய பாதுகாப்பும வழங்கப்படும. இது குறித்து பெற்றோர் அச்சமடையத் தேவையில்லை.

இவ்வாறு கல்வி ராஜாங்க

விழா கொழும்பில் நடைபெறவிருக்கிறது. கல்வி ராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவினரால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனை முன்னிட்டு ராஜாங்க அமைச்சர் பத்திரிகையாளர் மாநாடொன்றை நேற்றுக் காலை "இசுரு பாயா"வில் உள்ள ராஜாங்க அமைச்சின் அலுவலகத்தில் நடத்தினார்.

தமிழ்மொழி தினவிழா தொடர்பாக ராஜாங்க அமைச்சர்

நாடகம நடனம பாஓதல் கட்டுரை போன்றவற்றில் அண்மையில் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்று முதல் இடத்தை பெற்ற அனைவரும அகில இலங்கை ரீதியாக நடைபெறும போட்டிகளில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும 15 ஆம திகதி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பமபலப்பிட்டி இந்துக் கல்

(2 ஆம பக்கம பார்க்க)

# பத்மநாபா மீது மீண்டும் பிடியாணை

## நிதிமன்றம் பிறப்பித்தது

கொழும்பு, ஜூன் 4

நாசகார நடவடிக்கைகளின் மூலம அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் திட்டமிட்டதாகக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கின் எட்டாவது பிரதிவாதியான ஈ பி ஆர் எல் எப் இயக்க தலைவர் கே பத்மநாபா அல்லது ரஞ்சன் என்பவரை கைது செய்த நிதிமன்றத்தில்

[2ஆம் பக்கம் பார்க்க]

நீண்ட இடைவெளிக்குப் பின்

# யாழ். மாநகர சபை பௌர்ணமி கலை விழா

யாழ்ப்பாணம ஜூன் 3

நீண்ட கால இடை வெளிக்குப் பின்னர் யாழ் மாநகர சபை மாதந்தோறும பௌர்ணமி கலை விழாவை நடத்த முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம எதிர்வரும 7ஆம திகதி (வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு நாவலர் மண்டபத்தில் கலைவிழா ஒன்று நடைபெறும.

யாழ் அரசாங்க அதிபர் திரு அன்டன் அல்பிரட் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

மாநகர சபை ஆணையாளர் திரு வ் பி பாலசிங்கம விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

கானமூர்த்தி பஞ்சமூர்த்தியின் விசேஷ மேளக் கச்சேரியுடன் விழா ஆரமபமாகும. எழுத்

[2ஆம் பக்கம் பார்க்க]

# இன்று உலக சூழல் பாதுகாப்பு தினம்

கொழும்பு, ஜூன். 4

இன்று உலக சூழல் பாதுகாப்பு தினமாகும. இத்தினத்தை முன்னிட்டு இன்று நாடளாவிய ரீதியில் சூழல் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்கள் ஏற்பாடாகியுள்ளன.

சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பு பொது நூலகத்தில் கண்காட்சி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மத்திய சூழல் அதிகார சபையின் தலைவர் திரு எஸ் ஏ ஜினதாச இதனைத் திறந்து வைத்தார். (உ.-வ)

## சோமண்ணை



போன மச்சான் திரும்பி வந்தான் பணத்தோடே எண்டு புதுப் பாட்டுப் பாடலாம பாருங்கோ.

சட்டவிரோதமாக இருந்து

# ஜப்பானில் தொழில் புரிந்த இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கண்டி ஜூன் 4

ஜப்பானில் சட்டவிரோதமாக இருந்து தொழில்செய்து வந்த இலங்கையர்கள் பலர் கடந்த 31ஆம திகதி இரவு நாடு திரும்பியுள்ளனர்.

சட்ட விரோதமாக ஜப்பானில் தங்கியிருப்பவர்கள் அனைவரும இம் மாதம முதலாம திகதிக்கு முன்னர் ஜப்பானை விட்டு வெளியேறி விட வேண்டுமென்று ஜப்பான் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இலங்கை உட்பட உலகின் பல் பாக நாடுகளிலிருந்தும உல்லாசப் பயணிகள் என்ற போர்வையில் பலர் ஜப்பான் சென்று அங்கே பலதரப்பட்ட தொழில் துறைகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஜப்பானுக்கு இது பெரும

(2 ஆம பக்கம பார்க்க)



# யாகக் குதிரை இலங்கேஸ்வரம் செல்கிறது

கொழும்பு, ஜூன். 4

1985 ஆம ஆண்டு கொழும்பு பமபலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற அஸ்வமேத யாகத்தில் பயன்படுத்தப்பட்ட அஸ்வராஜா என்ற வெள்ளைக் குதிரை இன்று நுவரெலியாவுக்கு அனுப்பப் படுகிறது.

இந்த புனித குதிரையை நுவ

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# முஸ்லிம்களுக்கான தொழில் நுட்ப கல்லூரி

## பேருவளையில் அமைப்பு

கொழும்பு, ஜூன் 4

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளாகத்துக்கு அருகில் முஸ்லிம்களுக்கான தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுகிறது.

ஒரு கோடி பத்து லட்சம் ரூபா செலவில் இந்தக் கல்லூரி அமையும்.

ஜித்தாவில் உள்ள "இக்ரஃ" நிறுவனமும் இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் இணைந்து இதனை அமைத்து வருகின்றன.

இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தேசியத் தலைவரும், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட ஆயுட் காலத் தலைவருமான அல்ஹாஜ் எம் ஐ எம். நளீம் மேற்கொண்ட முயற்சியினால் இக்கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது.

விடுதிவசதி, தொழில் கூடங்கள், விரிவுரை மண்டபங்கள், நிர்வாகக் கட்டிடங்கள் நூலகம் பண்டகசாலை ஆகிய வசதிகளை இக் கல்லூரி கொண்டிருக்கும்.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இத் தொழில் நுட்பக் கல்லூரியின் குழாய் நீர் விநியோகத் திட்டத்துக்கு வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கியுள்ளார். (இ-007)

## மா. சபை ஆளுநருக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு, கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கும் அவர்களின் மெய்ப்பாதுகாவலர்களுக்கும் மட்டும் சம்பளம் வழங்காமை பாரபட்சமான செயலாகும்.

இன்று வடக்கு, கிழக்கில் ஆளுநரின் நிர்வாகமே இருப்பதாக அரசு பத்திரிகைகள் மூலம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த சம்பளம் வழங்கும் பொறுப்பு அவரையே சாரும். அவரிடம் இந்த விடயம் தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இதுவரை எமது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாத சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை. இதற்காக ஆளுநருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாக தற்போது நாம் ஆராய்ந்து வருகிறோம்.

இப்படி அவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பதவி இழக்கவில்லை என்றும் ஜனாப் சேகு இஸ்ஸதீன் மாகாண சபைச் சட்டத்திலிருந்து ஆதாரம் காட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது -

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தமது மாகாண சபை உறுப்பினர் பதவிகளை 31—5—1990 இல் இருந்து இழந்துள்ளார்கள் எனச் சில பத்திரிகைகள் [தினபதி அல்ல] செய்தி வெளியிட்டி

தொண்ணூறு நாள் காலப்பகுதி வரையில் எந்த உறுப்பினரும் மாகாண சபைக் கூட்டங்களுக்குச் செல்வதற்கு மாகாண சபை, கூட்டங்களை நடத்தி இருக்க வேண்டும்.

மாகாண சபை நடத்தாத கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் செல்லவில்லை என்று உறுப்பினர்களின் ஆசனங்களை வறிதாக்குவது கூட்டத்தைக் கேலி செய்வது மட்டுமல்லாமல், உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை அவமதிப்பதுமாகும்.

கூட்டங்கள் பற்றி அறிவிக்க வேண்டிய பொறுப்பு மாகாண சபைத் தவிசாளரைச் சார்ந்ததாகும். மாகாண சபைக் கூட்டங்களை அவர் நடத்தவில்லையானால் அதற்காக மாகாண சபை உறுப்பினர்களின் பதவிகளை வறிதாக்க முடியாது.

இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை ஆளுநர் தமது அதிகாரத்தைப் பிரயோகித்திருக்க வேண்டும்.

இலங்கை அரசியல் அமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் 154 ஆ 8 (அ) பிரிவின் படி,

"ஆளுநர், காலத்திற்குக் காலம், அவர் பொருத்தமானதென எண்ணுகிறவாறான அத்தகைய நேரத்திலும், இடத்திலும் மாகாண சபை கூடுமாறு அழைக்கலாம்"

எனவே மாகாண சபைக் கூட்டங்களை மாகாண சபைத் தவிசாளர் நடத்தவில்லையானால் அவற்றை நடத்துவதற்கும் திருகோணமலையில் கூட்டங்களை நடத்த சூழநிலை அமையவில்லையானால், அவற்றைக் கொழும்பில் நடத்துவதற்கும் ஆளுநர் தமது அதிகாரங்களைப் பிரயோகித்திருக்க முடியும்.

இவற்றைச் செய்யாமல் மாகாண சபை உறுப்பினர்கள் மீது பழியைப் போட்டு, அவர்கள் பதவிகளை இழக்கச் செய்ய முடியாது. இவ்வாறு யாரும் செய்ய முற்படுவார்களானால் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தயங்காது.

இப்படி ஜனாப் சேகு இஸ்ஸதீன் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். (உ-ற)

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாளர் சொக்கன், கம்பன் கழக தலைவர் திரு எஸ் ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

"நிலவே நீ சாட்சி" என்ற தலைப்பில் கவியரங்கமும் மாநகர சபை ஊழியர்களின் பக்திப் பாடல்களும் இடம் பெறும். (உ-ர-120)

## ரூபவாஹினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகுஹெதர தலைமையில் நடைபெற்றது.

ஜனாப் பாருக் தமதுரையில் மேலும் கூறியதாவது—

"இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பல பாத்திரங்களைப் படைத்து இந் நாட்டு மக்களை இழிவுபடுத்துகிறது. நையாண்டியும் செய்கிறது.

அண்மையில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியை தொலைக் காட்சியில் நாம் நோக்கினோம்.

இந்த கோயில் ஒன்றில் கடமைபுரியும் அர்ச்சகர் ஒருவரின் வழிபாட்டுக் கிரியைகளையும் கிராம சிங்கள நபர் ஒருவரின் இயல்பையும் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் செயல்பாட்டையும் இழிவான முறையில் ரூபவாஹினி சமீபத்தில் சித்திரித்துக் காட்டியது.

இதைக் கண்டு பலரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவ்வாறு சமூக பழக்க வழக்கங்களை வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாகக் காட்டுவதை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார். [உ—017]

## 30 தங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லூரி ஆகியவற்றில் ஏககாலத்தில் மேற்படி போட்டிகள் நடைபெறும்.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் பரிசளிப்பு விழாவும் சிறப்பு நிகழ்ச்சிகளும் மறுநாள் 16 ஆம் திகதி நடைபெறும்.

போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் சகல மாணவர்களும் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 3 மணிக்கு பம்பலப்பிட்டி இந்து கல்லூரிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வரும் மாணவ மாணவிகளுக்கு 3 ஆம் வகுப்பு ரயில் பயணச் சீட்டுகள் வழங்கப்படும். அவற்றை அவ்வப்பகுதி கல்விப் பணிப்பாளர்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தங்குமிடம், உணவு மற்றும் பாதுகாப்பு வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படும். மாணவ மாணவிகளை ஆசிரியர்கள் பொறுப்பாக அழைத்து வருவர்.

எமது ராஜாங்க அமைச்சினால் நடத்தப்படும் இந்த தமிழ் மொழி தின விழாவுக்கு பலர் தங்களது ஆதரவை வழங்கி இருக்கின்றனர். குறைந்த நிதியைக் கொண்டு இவ்விழாவை பூரணமாக நடத்த முடியாது.

நலன் விரும்பிகள், வர்த்தகர்கள் போன்றோர் பரிசுப் பொருட்களையும் நிதி உதவிகளையும் வழங்கி இருக்கிறார்கள். மாணவர்களின் தங்குமிட வசதி; உணவு போன்றவற்றை

பிரிவின் முக்கிய பணிகளின் முதல் கட்டமே ஆகும்.

இவ்விழா தொடர்பாக "சிறப்பு மலர்" ஒன்றை வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் நிதி உதவிகளையும், நன்கொடைகளையும் பெறவும் உத்தேசித்துள்ளோம். இன்னும் சிறிது காலமே இருப்பதால், விழா ஏற்பாட்டுக்காக பல குழுக்களை நியமித்து செயற்பட்டு வருகிறோம்.

மேல் மாகாண கல்வித் திணைக்களமும் எமக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கி உள்ளது.

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் ராஜாங்க அமைச்சருடன் தமிழ்ப் பிரிவு பணிப்பாளர் திரு வெ சபாநாயகம் பிரதம கல்வி அதிகாரி திருமதி சொர்ணவதி மாசிலாமணி, மேல் மாகாண கல்வி அமைச்சின் பிரதி கல்வி பணிப்பாளர் (தமிழ்ப் பகுதி) திரு த சிவபைராஜா, கல்வி அதிகாரி (கொழும்பு -கம்பஹா) ஜனாப் எம் எஸ் எம் அலிகான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-ழ)

## நினைவு தின வைபவம்

கொழும்பு, ஜூன் 4

அக்குறணை ஸ்ரீலங்கா இஸ்லாமிய கவுன்சிலின் ஏற்பாட்டில் இமாம் கொமெய்னி நினைவு தின வைபவம் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி மாலை நடைபெறும்.

அக்குறணை மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் ஈரான் தூதரகப் பொறுப்பதிகாரி ஜனாப் பராஜிராட் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

கண்காட்சி, வீடியோ படக்

## ஈராக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஜனாப் தாரிக் அகமத மஃரூப் அமைச்சர் அஸ்வரை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தார். அவ்வேளையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈராக் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம் மற்றும் விசேட பாடங்களை கற்க ஈராக் அரசு புலமைப் பரிசில்களை இலங்கை மாணவர்களுக்கு வழங்க இருப்பதாகத் தூதுவர் தெரிவித்தார்.

பாடநெறிகள் ஆங்கிலத்திலேயே போதிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் எப்பகுதியிலாவது அரபு மொழியைக் கற்பிப்பதற்கு தகுதியானவர்களை நியமிக்க ஈராக் தயாராய் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

கலாசாரத் தூதுக் குழுக்கள் பரிமாற்றம் செய்து கொள்ளல் -

சர்வதேச கருத்தரங்குகளை நடத்துதல் - கருத்துப் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றுக்கும் ஈராக் தயார் என்று தூதவர் மஃரூப் மேலும் குறிப்பிட்டார். [உ—007]

## இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சி தருகிறான்!
கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
10-30, 2-30, 6-00, 9-30
ரியோ (கொம்பனித்தெரு) (குளிரூட்டப்பட்டது)
வெள்ளி முதல் திங்கள் வரை காட்சி நேரங்கள்
10-30, 2-30, 6-00, 9-00
செவ்வாய் முதல் வியாழன் வரை காட்சி நேரங்கள்
10-30, 2-30, 6-00
ராணி (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-00
கமல்ஹாசன் — அமலா நடித்த
**சத்யா** (கலர்)

2 வது வாரம்
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
2-30, 6-00, 9-30
கொன்கோட் (தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00
மனோகரா (யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00
ரஜனிகாந்த் — கௌதமி பேபி ஷாலினி — வி கே ராமசாமி நடித்த
ஏ வி எம்மின்
**ராஜா சின்ன ரோஜா** (கலர்)

3 வது வாரம்
முருகன் (ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15
கடைசி வாரம்
ஈரோஸ் (பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30
சுபராஜ் (மட்டக்குளிப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30

## யாகக் குதிரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைராஸ் இண்டர்நேஷனல்
டிரவல்ஸ் அண்ட் டுவர்ஸ்

பதி அல்ல] செய்தி வெளியிட்டிருந்தன—

இச் செய்தி சட்ட முரணானதும் உண்மைக்கு மாறானதுமாகும்—

1982ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 5 உப பிரிவு 2 இன்படி —

"தொண்ணூறு நாட்களைக் கொண்ட ஒரு காலப் பகுதிக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் சபையின் அனுமதியின்றி அதன் எல்லாக் கூட்டங்களுக்கும் வருகை தராதிருப்பின் சபையானது அவரது ஆசனத்தை வறிதானதென வெளிப்படுத்தலாம்—

இத்தோடு இதே பிரிவு 5 இன் 1ஆவது பிரிவிலும் சில ஏற்பாடுகள் இருப்பினும் அவை வடக்கு கிழக்கு மாகாண சபை தொடர்பாய் எழுந்துள்ள பிரச்சினைக்கு அறவே பொருத்தமற்றவை ஆகும்—

1990 மார்ச் 1ஆம் திகதியன்றே வடக்கு கிழக்கு மாகாண சபை கடைசியாகக் கூடியது—

1990 மார்ச் 01 இலிருந்து 1990 மே 31 வரை உள்ள

---

## தினபதி சிறு விளம்பரம்

### பேஷ் இமாம் தேவை

ருவன்வெல்ல ஜும்மாப் பள்ளிக்கு பேஷ் இமாம் தேவை நேர் முகமாக அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். தலைவர் அல்ஹாஜ் ஏ. ஜே. எம். ரியாழ், ஜும்மாப் பள்ளி ருவன்வெல்ல

---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரெலியாவில் உள்ள இலங்கேஸ்வரர் ஆலயத்தின் ஸ்தாபகரான முருகேசு சுவாமிகளிடமிருக்கிறார்— குதிரையை இலங்கேஸ்வரர் ஆலய குருவின் பராமரிப்பில் விட்டு வைப்பது என்று இந்து கலாசார அமைச்சர் திரு பி பி தேவராஜ் முடிவு செய்திருக்கிறார்—

இந்தக் குதிரையைப் பராமரிக்கும் செலவில் ஒரு பகுதியை தொடர்ந்து இந்த அமைச்சு ஏற்றுக் கொள்ளும் எனத் தெரிகிறது—

நுவரெலியாவில் ரேஸ் குதிரைகளைப் பராமரித்துப் பழக்கப்பட்ட ஒரு குடும்பம் ஜனசக்தி திட்டத்தின் கீழ் சகல உதவிகளும் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது—

இந்தக் குடும்பத்தின் தலைவரே இந்தக் குதிரையைப் பராமரிப்பார்— அவருடைய சமயத்தையும் குதிரைக்கு ஏற்படக் கூடிய வைத்திய செலவினங்களையும் அமைச்சு பொறுப்பேற்கும்—

குதிரைக்கான உணவு வகைகளை ஆலய நிர்வாகம் வழங்குமெனத் தெரிகிறது—

குதிரையின் புனிதத் தன்மை கெடாதபடி அதை ஒரு சொகுசு வண்டியில் ஏற்றி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் நேற்று அமைச்சில் உள்ள இந்து சமயப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டன—

அஸ்வமேத யாகத்துக்காக முன்னாள் அமைச்சர் திரு செ இராசதுரையினால் பாகிஸ்தானிலிருந்து தருவிக்கப்பட்ட இந்த "அஸ்வராஜா" என்னும் வெள்ளைக் குதிரை யாகம் முடிந்த பின்னர் கடந்த ஐந்து வருடங்களாக மட்டக்களப்பிட்டி கோயிலிலேயே கட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்—

[உ]

---

ந்து கொள்வார்—

கண்காட்சி, வீடியோ படக் காட்சி, கண்டி மாவட்ட கட்டுரைப் போட்டி ஆகியனவும் நடைபெறும்— (இ—007)

---

## ஹஜ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் தடுப்பூசியை ஏற்றுக் கொள்வோர் மருதானை டீன்ஸ் றோட்டில் உள்ள நோய் தடுப்புப் பிரிவுக்குச் செல்ல வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருக்கும் யாத்திரிகர்கள் காலி, குருநாகல், சிலாபம், புத்தளம் பலாங்கொடை ஆகிய இடங்களில் உள்ள சுகாதார, வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளலாம்.

(உ—மு)

---

## ஜப்பான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலையிடியாக இருந்தது—

ஆனால் ஜப்பானில் சட்ட ரீதியாகக் கடமை புரிகின்றவர்களைத் தவிர ஏனையோர் எல்லோரும் ஜூன் முதலாம் திகதிக்கு முன் வெளியேற வேண்டுமென பல மாதங்களுக்கு முன்னரே அறிவித்தல் கொடுக்கப்பட்டது—

இதற்கு இணங்க இலங்கையர்களும் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களும் கடந்த 31ஆம் திகதியுடன் தத்தமது நாடுகளுக்குத் திரும்பிவிட்டனர்—

ஜப்பான் நாட்டில் சாதாரண கூலி வேலை செய்வோருக்கும் மாதாந்தம் இலங்கை நாணயப் பெறுமதியின்படி 30,000 ரூபாவுக்கும் மேற்பட்ட சம்பளம் கிடைப்பதாக அங்கிருந்து திரும்பியோர் தெரிவித்தனர்—

[உ—017]

---

...களையும் வழங்கி இருக்கிறார்கள். மாணவர்களின் தங்குமிட வசதி; உணவு போன்றவற்றையும் சிலர் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

வெற்றி பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 30 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

மேலும் தமிழ் மொழி தின விழாவுக்காக நன்கொடைகள், நிதி உதவிகள் வழங்க விருப்பம் தெரிவிப்பவர்கள் ராஜாங்க அமைச்சின் தமிழ்ப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளலாம்.

1984 ஆம் ஆண்டிற்கு பின் நடைபெறும் இந்த விழா தமிழ்

---

## தமிழ்நாட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜராகுமாறு மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது:

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் திரு எச் என டீ ஜயசூரிய நேற்று இதற்கான பணிப்புரையை பிறப்பித்தார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதிவாதியோ அல்லது அவர் சார்பில் சட்டத்தரணி ஒருவரோ மன்றுக்கு சமுகமளிக்கவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மூலம் இதற்கு முன்னரும் பிரதிவாதிக்கெதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணை தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர், அறிக்கை ஒன்றைத் தபாலில் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனையடுத்து நீதிவான் மீண்டும் பிரதிவாதிக்கெதிராக பிடியாணை பிறப்பித்தார்.

(உ—வ).

---


டிரவல்ஸ் அண்ட் டுவஸ்

நிறுவனத்தினரால் நடத்தப்படும்

## ஹஜ்—கருத்தரங்கு

கொழும்பு—

இடம்— கொச்சிக்கடை ஜும்ஆப் பள்ளி
காலம்— 13 துல்கஃதா 1410 (7—6—90) வியாழன் காலை 9—00 மணி

கண்டி

இடம்— அல்ஹாஜ் டி எல் எம அனிபா ஜே பி, 174, பூவேலிகட ஹந்தஸ்ஸ (இல்லத்தில்)
காலம்— 15 துல்கஃதா 1410 (9—6—90) சனி காலை 9—00 மணி

நிகழ்ச்சி நிரல்

1 புனித ஹஜ்ஜின் அகமியங்கள்— மௌலவி எஸ் எல் எம ஹஸன் (அஸ்ஹரி) 9—30 — 12—00 மு ப வரை.
2 ளுஹ்ர் ஜமாத் மதிய போஷணம் 12—00 — 1—30 பி ப
3 புனித ஹஜ்ஜின் கடமைகளும், நடைமுறைகளும் மௌலவி எம் எஸ் எம் மன்சூர் 1—30 — 2—30 பி ப
4 வைத்திய ஆரோக்கிய ஆலோசனைகள் டாக்டர் அஹ்மட் மன்சூர் 2—30 — 3—00 பி ப
5 புனித ஹஜ்ஜின் நன்மைகளும் மேன்மைகளும் மௌலவி இஸட் ஏ எம ஹனிபா 3—00

அஸர் ஜமாஅத், துஆ, ஸலாம் புனித ஹஜ் கடமையை முறையாகவும் இபாதத்தாகவும் நிறைவேற்றுவதற்கான தமிழ் விளக்கவுரைகள் அளிக்கப்படும். அனைத்து ஹாஜிகளையும் கலந்து பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது ஹஜ் விமானம்
இன்ஷா அல்லாஹ்
19, ஜூன் 1990 காலை 8—00 மணிக்கு புறப்படும்

எங்கள் குழுவில் பிரயாணம் செய்யும் ஹாஜிமார் அனைவரும் காலை 5 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சமுகமளிக்குமபடி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்—

**KHAIRAZ INTERNATIONAL TRAVELS & TOURS**

253/A First Floor
George R De Silva Mawatha
Colombo — 13
Tp: 447123. 433032. 436848
Fax: 540977 Tlx: 21792 Khairaz CE

அனைவருக்கும் "ஹஜ் மப்ரூர்" கிடைக்க வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக!


---


(மட்டக்களப்பு)
2—30. 6—15. 9—15
சனி/ஞாயிறு 10—30
பாக்கியராஜ் சண்டை காட்சிகள் இனிமையான பாடல்கள் நிறைந்த சித்திரம்
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த
**சங்கர் குரு**
(கலர்)

8 வது வாரம்
வின்சர்
[யாழ்நகர்]
10—30 2—30 6—00
நியூ ஒலிம்பிக்
(நுவரெலியா)
10—20. 2—30. 6—00
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
**இது நம்ம ஆளு**
[கலர்]

9 வது வாரம்
சமந்தா
(கொட்டாஞ்சேனை)
(புதன் வரை)
10—00 2—30 6—00. 9—30
பிரின்ஸ்
(ஹட்டன்)
(புதன் வரை)
2—30 6—00
சனி/ஞாயிறு 10—30
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10 30 2—30 6—30
ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவீஸ்
**ஊர்க்காவலன்**
(கலர்)

# முதலில் பயமாக இருந்தாலும் நடிப்பில் முன்னேறிவிட்டேன்

— ரேகா

அண்மையில் நடிகை ரேகா வைச் சந்தித்து உரையாடிய போது கிடைத்த தகவல்கள்;—

முதல் முதல்ல நடிக்கும போது எப்படி இருந்தது? நல்லா நடிச்சீங்களா?

முதல் முதல்ல நடிக்கும போது பயமாத்தான் இருந்தது— ஆனா நல்லா நடிச்சுட்டேன்— எல்லோரும பாராட்டினாங்க—

எப்படித் திரை உலகத்தில் நுழைஞ்சீங்க?

திரையுலகில் நுழைவேன்னே நினைக்கல்ல... அது ஒரு ஆக்ஸிடண்ட்! கலைமணி அவர்கள் என் ஸ்டில்ல பார்த்தார்— சினிமா யோகம ஆரமபம ஆயிடுச்சு?

நடிக்கும முன் கதையைக் கேட்டு நடிப்பீங்களா? ஒரு படத்தின் முழுக் கதையும உங்களுக்குத் தெரியுமா?

கூடிய மட்டும படத்தின் கதையைத் தெரிந்து பின்னர் தான் நடிக்கிறேன்— அப்பத்தான் கேரக்டரில் ஷைன் பண்ண முடியும என்று நினைக்கிறேன்—

"புன்னகை மன்னன்" படம மிகுப் பிரபலமாகி விட்டது! அந்தப் படத்தில் உஙகள் பற்றி பலரும விமர்சனம செய்தார்கள்...

நடிப்பு என்றால் எல்லாம நடிப்புத்தான்... நடிக்க வந்த பிறகு அப்படி நடிக்க மாட்டேன்... இப்படி நடிக்க மாட்டேன் என்றெல்லாம சொல்லுறது சரியல்ல!

கதையமைப்பு என்ற ஒன்று நமக்குப படிந்திருந்தால் அதன்படி அவர்கள் சொல்வதுபடி நடிக்க வேண்டியதுதான்!

கிசு கிசுக்களில் மாட்டிக் கொண்டு விழுப்பது உண்டா? தங்களைப் பற்றி கிசு கிசு வருவதை விரும்புவீர்களா? சில நடிகைகள் தாங்கள் பரபலமாக வேண்டுமென்பதற்காக கிசுகிசுக்களைத் தாங்களே பரப்புகிறார்கள் என்று கூடச் சொல்வதுண்டு... நீங்கள எப்படி?

(சிரிப்பு) நான கிசுகிசுக் களை ரசிப்பவதான், ஆனால் அது நமபுமபடியாக இருக்க வேண்டும— மிகவும ஆபத்தான கிசுகிசுக்களை நான் வெறுக்கிறேன— ஆனா அப்படி வந்துட்டதேன்னு நான் மனசு ஒடிஞ்சி போயிடறது இல்லே, அதை "இக்னோர்" பண்ணி வருகிறேன... மத்த நடிகைங்க கிசுகிசுக்களை உற்



ரேகா

நடிகையாவதற்கு எது முக்கியம? அழகா திறமையா?

ஒரு பொண்ணுக்குத் திறமை முக்கால் பங்குன்னா அதிஷ்டம கால் பங்கு இருந்தாத்தான் அவ நடிகையா வர முடியுமனு நினைக்கிறேன்—

நல்லா நடிக்கக் கூடிய வங்க அழகா இருப்பவங்க கூட எத்தனையோ பேர் இருக்காங்க... அவங்களுக்கு சரியான வாய்ப்பும அதிஷ்டமும இல்லாததால் நடிகையா முடியாம இருக்காங்க...

இன்னுங் கனமான வேடங்களை ஏற்றுச் செய்யலாமே? அதற்கு வாய்ப்புகள் வரவில்லையா? அல்லது தாஙகள் விருமபவில்லையா?

இல்லையே... முன்பு நான் செய்த ரோல்களை விட இப்போது நல்ல கேரக்டர் ரோல்களைப் பண்ணுகிறேனே... எனக்கே என் நடிப்பில் வித்தியாசம தெரிகிறது... நான் இப்போது நடிப்பில் நிறைய முன்னேறி இருக்கேன்னு படுது— இனியும் கிடைக்கிற வாய்ப்புகளை நன்றாகப் பயன்படுத்தி மேலுந் புகழ்பெற முடியும என்ற நமபிக்கை இருக்கிறது—


லட்சுமி சாரதா போன்று தேசிய அளவில் விருது பெற வேண்டும என்ற ஆசை இருக்கிறதா?

ஒரு நடிகை பணத்துக்கும புகழுக்கும தானே நடிக்கிறார்— தேசிய அளவில் விருது வாங்கினால் புகழ்தானே? யாருக்குத்தான் ஆசை இருக்காது! ஆனால் வாய்ப்புகள் சரிவர அமையாமல் போய் விடுகின்றன— ஆனாலும் மக்கள் என் நடிப்பை விருமபறாங்க... அது போதும்! இதற்கு மேல் ஒரு அவார்ட் வந்தால் அதுவும மகிழ்ச்சிதான்!

உங்களின் லட்சியம என்ன? ஏதாவது மனதிற்குள் சபதம உண்டா?

அப்படியெல்லாம எதுவும் கிடையாது... நன்றாக நடித்து மேலுந் மேலும் புகழ்பெற வேண்டும என்பதே என் ஆசை!

[இ—10]



ராதாசுதாவின் சிரிப்பழகில் சொக்கி சுருண்டு விட்ட ராமராஜன் அதில் இருந்து தப்பி விட்டால் சரி!
[படம்;— "தங்கத்தின் தங்கம்"]

[எ—10]

# பொத்துவிலுக்கு பண்ணைத் திட்டம்

## சுவிஸ் நிறுவனம் உதவி

கொழும்பு ஜூன் 3

சுவிட்சர்லாந்து நாட்டில் அரச சார்பற்ற நிறுவனம ஒன்று பொத்துவிலில் பண்ணைத் திட்டம ஒன்றினை ஆரமபிக்கவிருக்கிறது.

ஹெல்வெற்றாஸ் எனப்படும இந்த நிறுவனத்தின் செயற்திட்ட இயக்குநர் ஒட்டோ ஜோர்ஜ் அண்மையில் இப்பகுதிக்கு நேரடி விஜயம ஒன்றினை மேற்கொண்டார்.

இப்பகுதியில் உள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நேரடியாகக் கண்டறிந்த ஒட்டோ ஜோர்ஜ் அமமக்கள் தாமாகவே முன்வந்து செய்யக் கூடிய தொழில் முயற்சிகள் பற்றியும கேட்டறிந்தார்.

இதன்படி உல்லை, பாணமை ஊறணி, இன்ஸ்பெக்ரர் ஏற்றம போன்ற பகுதிகளில் உள்ள மக்களை மிருக வளர்ப்பு, மீன் பிடி, சிறுதானிய உற்பத்தி, பழ வகை உற்பத்தி போன்ற துறைகளில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தாம மேற்கொள்வதாகவும உறுதியளித்தார்.

உத்தேச பண்ணைத் திட்டம அமைக்கும நடவடிக்கைகளில் பொத்துவில் விவசாய, கால் நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சஙகம "ஹெல்வெற்றாஸ்" நிறுவனத்துக்கு தமமாலான முழு உதவிகளையும வழங்க முன் வந்திருக்கிறது.

ஆரமப நடவடிக்கையாக செயற்திட்ட அறிக்கைகள் தயாரிக்கும வேலைகளில் மேற்படி கூட்டுறவுச் சஙகத்தின் செயற்திட்ட அலுவலர் ச பரமசோதி, செயலாளர் க நல்லதமபி ஆகியோர் முமமுரமாக ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## மனித மேம்பாடு கல்வி போதனை

ஏறாவூர் ஜூன் 3

பாடசாலைகளில் மனித மேம்பாடு பற்றிய கல்வி போதனையை அமுல் நடத்த மட்டக்களப்புக் கல்வித் திணைக்களம நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, முன்னோடி ஆரமபப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் ஆண்டு 1, ஆண்டு 2, ஆண்டு 3, கற்பிக்கும ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழஙகப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-073)

## காய்ச்சல் பரவுவதால் ஆயுள் வேத டாக்டர்களின் சிரமம் போக்க ஏற்பாடு

கொழும்பு ஜூன் 3

நாடு முழுவதும பரவி வரும காய்ச்சலால் பீடிக்கப்பட்டு ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளில எண்ணற்றோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்—

நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் ஆயுள்வேத டாக்டர்களுக்கு ஏற்பட்டிருக்கும சிரமத்தைப் போக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும—

சுதேச வைத்திய அமைச்சு இது பற்றி அறிவித்துள்ளது—

சகல வகையான குளிகைகள், மற்றும மருந்து வகைகள் ஒரு வாரத்துக்குள் சகல சிகிச்சை நிலையங்களுக்கும அனுப்பப்படும—

சுதேச வைத்திய அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது—

பிறர் இந்நோயினால் பாதிக்கப்படாமல் இருக்கவும ஒரு தடுப்பு மருந்தை சுதேச வைத்திய அமைச்சு அறிமுகப்படுத்த இருக்கிறது—

(எ-ரி-007)

## அரபு விவகாரங்களில் நீதியான செயற்பாடு

### இலங்கையைப் பாராட்ட வேண்டுமென தீர்மானம்

கொழும்பு ஜூன் 3

இஸ்லாமிய அரபு விவகாரங்களில் இலஙகை நீதியான முறையில் செயல்படுகிறது— இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவையும தைரியமாக மூடியது இவற்றுக்காக இலஙகையைப் பாராட்ட வேண்டும.

இவ்வாறான ஒரு தீர்மானம கொழுமபில் நடந்த மூன்றாவது சர்வதேச இஸ்லாமிய "தஃவா" கருத்தரங்கின் இறுதி அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது—

பலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்குதிகளை அனுப்பவும கருத்தரஙகு தீர்மானித்தது—

(ரி-007)

## திடீர் விஜயத்தில் 20 டிப்போக்களுக்கு சென்று தவறுகளை கண்டுபிடித்தேன்

### போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் —பாரூக்

கொழும்பு ஜூன் 3

பாரிய நஷ்டம ஏற்பட்ட போதி

...பருகிறேன்... மதத் நடிகைங்க கிசுகிசுக்களை உற்பத்தி பண்றாங்களான்னு தெரியாது...

தங்கள் குடும்பத்தில் வேறு யாருக்கும் நடிப்பில் ஆர்வம் உண்டா?

கிடையாது... ஆனா எல்லோரும் நான் நடிக்கிறதுக்கு சப்போர்ட் பண்ணுவாங்க... நடிப்பில் என் நிறை குறைகளைச் சுட்டிக்காட்ட முதல் ரசிகருங்க எங்க வீட்ல இருக்கிறவங்க தான்!

தங்களின் திருமணத்தைப் பற்றி பலவிதமாக பேச்சு அடிபடுகிறது— அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்— தங்கள் திருமணம் எப்போது? அல்லது பெற்றோர்கள் பார்க்கும் மாப்பிள்ளைக்கு "ஓ கே" சொல்வீர்களா?

நான் என் திருமணத்தைப் பற்றி இதுவரை சிந்தித்துக் கூடப் பார்க்கவில்லை— அப்படி இருக்க என் திருமணத்தைப் பற்றி பலவிதமாக பேச்சுக்கள் அடிபடுகிறது என்று நீங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது—

திருமணம் என்பது காதல் திருமணமாகக் கூட இருக்கலாம்... ஏன், நாளையே ஒரு நபரைச் சந்தித்து அவரை விரும்பலாம்! இதெல்லாம் திட்டமிட்டு நடக்கக் கூடிய காரியம் இல்லையே... ஆனா, திருமணம் எனக்கு இப்போது இல்லை! இன்னும் மூணு வருஷங்களாவது போகணும்!

[படம்:— "தங்கத்தின் தங்கம்"]

[எ—10]

## தினபதி சினிமா

# புதுமுக குருவின் "புதிய பயணம்"

பிரசாத் ஒலிப்பதிவு கூடத்துக்கு சென்ற நிருபரின் காதில் மனோசித்ரா பாடிய இனிய பாடல் ஒன்று ரீங்காரமிட்டது.

மனோசித்ரா பாடிய பாடலுடன் சன்லைட் புரொடக்சன்ஸ் தயாரிக்கும் "புதிய பயணம்" என்ற படத்தின் தொடக்க விழா நடந்தது—

"புதுப் புது அர்த்தங்கள்" படத்தில் அறிமுகமான குரு — சபனா காதல் ஜோடியாக நடிக்க விஜயன் செந்தாமரை. விஜய சக்கரவர்த்தி குமரிமுத்து சின்னிஜெயந்த் ஓமக்குச்சி நரசிம்மன் பிந்துகோஷ் மதுமுகங்கள் சந்தியா சிங்கப்பூரைச் சேர்ந்த லதா நடிக்கிறார்கள்—

பூவை செங்குட்டுவன் பாடல் எழுத புதிய இசையமைப்பாளர் ஆர் என் ராஜன் இசையமைக்க, ராம்கி ஒளிப்பதிவு செய்ய கதை திரைக்கதை வசனம் எழுதி எம் ஆர் மோகன் ராஜ் டைரக்ட் செய்கிறார்—

இவர் ஆஸ்கார் மூவீஸ் சார்பாக எம் பாஸ்கர் தயாரித்து டைரக்ட் செய்த பல



குரு

படங்களில் துணை டைரக்டராக இருந்தவர்—

சில பிரபல நடிகர் — நடிகைகளும் நடிக்கும் "புதிய பயணம் படத்தின் படப்பிடிப்பை கொடைக்கானல் மற்றும் மதுரை மாவட்டத்தில் இயற்கை அழகு சொட்டும் இடங்களில் குறுகிய காலத்தில் தயாரித்து திரையிட திட்டமிட்டுள்ளனர்— ரமேஷ்காந்த் தயாரிக்கிறார்—

[இ—10]

## உண்மைக் கதை

தாய பட்டம்மாள் கிரியேஷன்ஸ் என்னும் பட நிறுவனம் தயாரிக்கும் படம், "ஊரெல்லாம் இதே பேச்சு"

உண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் முன்னணி நடிகர்—நடிகைகள் நடிக்கிறார்கள்—

கதை, திரைக்கதை, வசனம், எழுதி, டைரக்ட் செய்கிறார் கே ஆர் ராமாமிர்தம்— ஒளிப்பதிவு ஏ வி ராமகிருஷ்ணன்— இசை உமா கண்ணதாசன்— தயாரிப்பு மேற்பார்வை எஸ் கீதா

[இ-10]

மான போராட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும்—

யூதக் குடியேற்றங்கள் அங்கு செயல்படுவதைக் கண்டிக்க வேண்டும்—

"இன்திபாதா" போராட்டத்துக்கும் பலஸ்தீன இளைஞர் எழுச்சிக்கும் ஆதரவளிக்க வேண்டுமென்று மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது—

லிபிய அரபு ஜமாஹிரிய்யாவுக்கும், ஈராக்குக்கும் அரபு முஸ்லிம் நாடுகளுக்கும் எதிராக ஸியோனிஸ வாதிகளும் ஏகாதிபத்திய வாதிகளும் தொடரும் சவால்களை கண்டிக்கப்பட வேண்டும்,

காஷ்மீர் மக்களின் நியாயமான சுதந்திரப் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவு அளிக்க வேண்டும்—

இந்திய அரசு இந்த விவகாரத்தில் நீதியாகவும் சமாதானமாகவும் செயற்பட வேண்டும்—

ஆப்கான் மக்களின் கஷ்டங்கள் நீக்கப்பட வேண்டும்—

தென் ஆபிரிக்க மக்களின் இன ஒழிப்பு வீரப் போராட்டத்துக்குச் சகல முஸ்லிம்களும் சமாதான விரும்பிகளும் ஆதரவளிக்க வேண்டும்—

நமீபியா சுதந்திரம் பெற்றமைக்கு கருத்தரங்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறது— நமீபியாவிலிருந்து சகல தென் ஆபிரிக்க துருப்புக்களும் அகற்றப்பட வேண்டும்—

தென் தாய்லாந்திலும் தென் பிலிப்பைன்சிலும் உள்ள முஸ்லிம்களின் உரிமைகளும் சுய நிர்ணயமும் பாதுகாக்கப்பட வேண்டும்—

ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவுக்கும், லிபிய அதிபர் கேர்ணல் முஅம்மர் கடாபிக்கும் இரு தந்

கொழும்பு ஜூன் 3

நான் கடந்த ஒன்றரை மாதங்களில் இருபது பஸ் டிப்போக்களுக்கு திடீர் விஜயம் செய்தேன்—

அங்கு நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனைகளில் சில அதிகாரிகளின் தவறுகளையும் கண்டு பிடிக்க முடிந்தது—

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர், அல்ஹாஜ் யூ எல் எம் பாரூக் இவ்வாறு கூறினார்—

அளுத்கம டிப்போவில் "போக்குவரத்து வாரத்"தை ஆரம்பித்து வைத்து அமைச்சர் உரையாற்றினார்—

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் சேவையாற்றும் தேசிய ஊழியர் சங்க (ஜாதிக சேவக சங்கம) உறுப்பினர்கள் சிலரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது—

ஜாதிக சேவக சங்க உறுப்பினர்கள் பலர் பஸ் டிப்போக்களுக்குக் காலையில் வந்து கையொப்பமிட்டு விட்டு வெளியே செல்வது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது—

ஊழியர்கள் இப்படிச் செய்வது துரோகமாகும்—

எந்த ஒரு அதிகாரியும் தமது கடமையைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும்—

அளுத்கம டிப்போவில் இன்று ஆரம்பிக்கப்பட்ட போக்குவரத்து வாரம் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்—

சிறந்த போக்குவரத்து வசதியைச் செய்து கொடுப்பதே எமது நோக்கம்—

இலாபம் கிடைக்கா விட்டாலும் மக்கள் கஷ்டப்பட இடமளிக்கக் கூடாது—

போக்குவரத்துத் துறை மூலம் பாரிய நஷ்டம் ஏற்பட்ட போதிலும் பஸ் கட்டணத்தை நாம் உயர்த்த மாட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்—

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்—ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பேசுகையில் கூறியதாவது—

நாட்டின் அபிவிருத்திக்கு கட்சி அரசியல் என்றுமே தடையாக அமையக் கூடாது என்றார்.

மேல் மாகாண போக்குவரத்து உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு லோரன்ஸ் மாதிவெல உரையாற்றினர்,

பெருந்தொகையான இ.போ.ச பஸ்கள் கடந்த காலங்களில் தீக்கிரையாக்கப்பட்டன,

நாமே எமக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டோம்—

கடந்த காலச் சம்பவங்களின் மூலம் நாம் பாடம் கற்க வேண்டும் என்றார்—

மேல் மாகாண உணவு கூட்டுறவு, கைத்தொழில், சமூக நலத்துறை அமைச்சர் ஜனாப் ஏ எம் யூனூப் பேசும் போது கடந்த காலத்தில் நாட்டில் அச்சுறுத்தல் நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் இந்த டிப்போ ஊழியர்கள் தமது உயிரைத் தியாகம் செய்து மக்களுக்காகக் கடமையாற்றினர்—

அதற்காக நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்—

(எ—107)


இலவசம்! இலவசம்!!

அனைத்தும் இலவசம்

**சவூதி அரேபியா**

— 7 நாட்களில் பயணம் —

★ வீட்டுப்பணிப்பெண்கள்

(வயதெல்லை 30—40)

பாஸ்போட் அளவு 6 படங்கள் (4 கலர்) உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்—

**AMEEN ENTERPRISES**

511—Prince of Wales Avenue

Colombo — 14.

Licence & App — 625/14/15/17/18/23

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4501
— 1990 ஜூன் 5—

## சூழல் பாதுகாப்பு தினம்

சர்வதேச ரீதியில் இன்று சூழல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது—

இந்த நூற்றாண்டு பல விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளைக் கண்டுள்ளது.

கைத்தொழில் விவசாய அபிவிருத்தியும் இந்த நூற்றாண்டில் பெருமளவில் ஏற்பட்டிருக்கிறது—

நகர நிர்மாணிப்புத் திட்டங்களும் வெகுவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை ஒரு விதத்தில் எவ்வளவோ பயனைத் தருகின்றன. அதேவேளை சூழலை மாசு படுத்துகின்றன.

சூழலை மாசுபட விடாமல் எப்படிப் பயன்களை அனுபவிக்கலாம்? இதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். சூழல் தினம் அதற்குப் பொருத்தமான தினம்.

இறைவனின் இலவச எழிற் கொடையான இயற்கை வளங்கள் முக்கியமாக மனிதனின் செயற்கை முயற்சிகளாலேயே மாசு படுகின்றன.

அதனால் மனிதனுக்கும், நீரிலும் நிலத்திலும் வாழும் ஏனைய உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் பேரழிவு ஏற்படுகிறது—

மனிதனால் பல்வேறு தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. அதனால் மழை வீழ்ச்சி குறைகிறது. நீரூற்றுகள் வற்றுகின்றன. நிலமும் காய்ந்த வரண்டு செழிப்பற்றதாகி விடுகிறது— பல இடங்களில் வனாந்தரங்கள் உருவாகின்றன.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் இரசா

# சுவாசிக்கும் காற்றை அசுத்தம் ஆக்காதீர்

## உலக சூழல் பாதுகாப்பு தினத்தின் கோஷம் இது

சர்வ தேச ரீதியில் சூழல் பாதுகாப்பு தினம் இன்று (5ஆம் திகதி) கொண்டாடப்படுகிறது.

இந்த நூற்றாண்டின் விஞ்ஞான, தொழில நுட்ப வளர்ச்சியின் பயனாகக் கைத்தொழில் மயமாக்கல், நகரவாக்கம் என்பவற்றால் சூழல் பெரிதும் மாசுறுகிறது.

ஒரு உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்த, அனைத்து நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த இக்கட்டான நிலையைச் சமாளிக்கும் வழிவகைகள் பற்றி, உலக நாடுகள் அனைத்திலும் இவ்வாண்டு பூமி தினமாகிய ஏப்ரல் 22ஆம் திகதி ஆராயப்பட்டது.

இறைவனின் இலவசக் கொடையான எழிலுறு இயற்கை அழகையும், பயன்மிகு வளங்களையும் கொண்ட எம பூமி இன்று செயற்கையின் ஆதிக்கத்துக்குட்பட்ட மனிதனின் செயற்பாடுகளாலேயே மாசுறுகிறது.

இதனால் மனிதனுக்கும், நீர் வாழ, நிலம் வாழ் உயிரினங்கட்கும், அனைத்துத் தாவர விருட்சங்களுக்கும் அழிவு ஏற்படும் பேராபத்து உருவாகியிருக்கிறது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு "ஒவ்வொரு தனி நபரும் உலக ரீதியாகச் சிந்தித்த உள்ளூர் ரீதியாகச் செயற்பட வேண்டும்" என்றும் ஐ. நா. தாபனம் அறிவுரை கூறியுள்ளது.

பூமித் தினம் தொடக்கம் சூழற் தினம் வரையிலான காலப் பகுதியிற் "சூழற் பிரச்சினைகளும், அவற்றைத் தீர்க்கும் வழிவகைகளும்" என்பது பற்றி உலக நாடுகள் அனைத்திலும் சிந்திக்கப்படுவதுடன் செயற் திட்டங்களும் வகுக்கப்பட்டன.

எம நாட்டில் இவ் விடயத்தில் எமது பங்களிப்பு என்ன? என்பதை அனைவரும் சிந்திப்பது மிகவும் பொருத்தமாகும்.

தொழிற்சாலைகளில் இருந்து வரும் இரசாயனக் கழிவுகள் நீர் நிலைகளையும், வளியையும் நிலத்தையும் அசுத்தப்படுத்துகின்றன. அணுகுண்டுப் பரிசோதனை மூலமும் இந்நிலை மோசமாகிறது.

"அமில்" மழையினாற் பெரிய காடுகள் அழிகின்றன. அபிவிருத்தியின் பொருட்டும் மனிதனால் காடுகள் அழிக்கப் படுகின்றன. இதனால் மழை, வீழ்ச்சி குறைகின்றது.

வளியில் கரியமிலவாயுவின் விகிதம் கூடுகின்றபடியால் வெப்பநிலை அதிகரிக்கின்றது, காலநிலை மாறுபடுகின்றது

—ஏ. டெனெடிக்ரா—

புதிய பாலை வனங்கள் உருவாகின்றன.

பூமியைச் சுற்றியிருக்கும் ஓசான் வாயுப் படலம் சூரியனின் கதிர் வீச்சின் தாக்கத்திலிருந்து உயிரினங்களைப் பாதுகாக்காமல் இன்றைய மாசுற்ற வாயுக்களினால் அழிகின்றது.

ஒரு இடத்தில் அது அற்றுப் போய் விட்டதாகவும் கூறப் படுகிறது. வான், தரை, கடல் வழிப் பயண போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய விமானங்கள், றொக்கெட்டுக்கள் கனரக வாகனங்கள் கப்பல்கள் என்பவற்றினால் வானம் தரை, கடல் பரந்த வெளி யாவும் மாறுகின்றன.

மேற் கூறியவற்றினால் ஏற்படும், மிகப் பெரிய சத்தங்கள், அதிர்வுகள் செவிப்புலனையும், நரம்புத் தொகுதியையும் பாதிக்கின்றன. ஒலி பெருக்கிகள், வானொலிப் பெட்டிகள் ஆகியவற்றின் பெரிய சத்தமும் இதே விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை.

வீடுகளில், வீதி ஓரங்களில், வேலி, மதில் அருகில் மரங்களை வளர்ப்பதால், அவற்றின் இலைகளின் ஆவியுயிர்ப்பு குளிர்மையைத் தருவதுடன், முகில்களை உருவாக்கவும் உதவும்.

தாவரங்களின் இலைகள் கரியமிலவாயுவை உறிஞ்சுவதால், வளியில் தற்போது இருக்கும் அவ் வாயுவின் விகிதத்தைக் குறைக்க உதவும்.

நகரங்களில் வாழ்வோர் மரங்களை நட்டு வளர்க்க முடியாவிடினும் சட்டிகளில் அலங்காரச் செடிகள், கள்ளி, கத்தாழை போன்றவற்றை எங்கெல்லாம் வளர்க்கலாமோ அங்கெல்லாம் வளர்க்கலாம்.

ஒவ்வொருவரும் தமது வாகனங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களைக் குறைத்த, கூடியளவு பஸ் சைக்கிள் என்பவற்றில் பிரயாணம் செய்யலாம்.

வீடுகளிலுள்ள கரப்பான், மூட்டைப்பூச்சி, நுளம்பு போன்றவற்றை அழிப்பதற்குப் பயன்படுத்தும் கிருமிநாசினிகளைத் தெளிக்கும் தெளி கருவிகள் சில வற்றிலிருந்தும், வாசனைத் திரவங்களை உடலிற் தெளிக்கும் சில கருவிகளிலிருந்தும குளோரோ, குளோரோகாபன் வெளியாகின்றது.

இந்த இரசாயனப் பொருள் பூமியின் ஓசான் போர்வையை அழிக்கவல்லது:

ஜெர்மனியில் சூழலை மாசுபடுத்தாத பொருள்களுக்கு 1978ஆம் ஆண்டு தொடக்கம் நீல நிறத்தேவதை கொண்ட முத்திரை பொறித்து, உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. இம் முத்திரை பொறிக்கப்பட்ட பொருள்கள் மட்டுமே அத்தேச மக்கள் வாங்குவார்கள்.

இன்று சூழல் மாசடைவதில் கணிசமான அளவு தனி நபர்களாலே ஏற்படுகின்றது எனலாம். வீதி ஓரங்களில் நீர் நிலைகளில், பொது இடங்களில் பொலித்தீன் உறைகள், கடதாசிகள், பேணிகளை எறிகின்றனர். குப்பைகளைக் கொட்டுகின்றனர். இதனால் சூழல் மாசுறுகிறது.

பொது மக்களிடையேயும், பாடசாலை மாணவர்களிடையேயும் சூழல் மாசுறுவது பற்றியும், அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் பற்றிய அறிவையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும்.

(ம)

# வாழைச்சேனை

## ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் இழுபறியா?

ஏறாவூர், ஜூன் 3

வாழைச்சேனை உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்குவதில் காலதாமதமும், இழுபறியும் ஏற்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களுடைய வேதனத் ... ஆம திகதியாகும். ஆனால் வாழைச்சேனை கல்வி அலுவலகத்தினர் இவ்வேதனத்தை அனேகமாக 27, 28 அல்லது அடுத்த மாதம் பிறந்த பின்பும் வழங்கி வருவதாகத் தெரிய வருகிறது.

இதற்குக் காரணம், அங்குள்ள கணக்கியல் கிளையில்

## ஆலிஎலயில் கடைகள்

பதுளை, ஜூன் 3

ஆலிஎல நகரில் புதிதாக கடைகளும் பொது மலசல கூடமும் கட்டப்படவுள்ளன—

ஆலிஎல வர்த்தகர் சங்கத்தின் உபதலைவர் திரு எம டீ எம அன்வர் (ஜே.பி.) மேற்கொண்ட முயற்சியின் பேரில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

வியலுவ தேர்தல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு சமரவீர வீரவன்னி இதற்கான நிதியை வரவு செலவு திட்ட நிதி

# குண்டசாலை: தமிழ் வித்தியாலயத்தில்

## விஞ்ஞான தின விழா

தெல்தெனிய, ஜூன் 3

குண்டசாலை தமிழ் வித்தியாலயத்தின் விஞ்ஞான தின விழா நேற்று 5ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறும்.

... எம தாஹிர், கண்டி சிடா இணைப்பதிகாரி திரு ஏ தர்மலிங்கம்,

விஞ்ஞான கல்வி அதிகாரி ஜனாப் எஸ் எஸ் சருக்டீன், விஞ்ஞான கல்வி ஆலோசகர் ஜனாப் எம எச் எம நவாஸ்,

## செய்தித் திரட்டு

### சிரமதான பணி

பதுளை, ஜூன் 3

பதுளை பொலிஸார் எதிர் வரும் 7ஆம் திகதி போயா தினத்தன்று மாபெரும் சிரமதான பணியொன்றில் ஈடுபட வுள்ளனர்,

ஆலிஎல போகொடையில் அமைந்துள்ள போகொட ரஜமகா விகாரைக்கு போகும் பாதையை பதுளை பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து சுத்தம் செய்யவுள்ளனர்,

இரண்டு மைல் நீளமான இப்பாதை வருடக்கணக்காக சுத்தம் செய்யப்படாமல் இருக்கிறது.

(இ-037)

### ஜனாதிபதி விஜயம்

தெல்தெனிய, ஜூன் 3

குண்டசாலை தொகுதிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம திகதி ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

விசேட மத வைபவங்களில் கலந்து கொள்ள ஜனாதிபதி பல்கொல்ல ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கும் அம்புக்கேதுறை ஜும்ஆ பள்ளிவாசலுக்கும விஜயம் செய்வார்.

இதற்கான ஒழுங்குகளை குண்டசாலை உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகின்றார்,

(இ-289)

### செயல் முறை அமர்வு

மடவளை, ஜூன் 3

கண்டி தொலைக்கல்வி நிலையத்தின் 1988-90 கல்வி ஆண்டு மாணவர்களுக்கான செயல் முறை அமர்வு எதிர்வரும் 16 ஆம், 17ஆம திகதிகளில் நடைபெறும்.

இவ் அமர்வு பேராதனை விஞ்ஞான வெளிக்கள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்புக் கடிதம் பிரதம போதனாசிரியரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ-431)

### வீடமைப்பு கடன்

சீனக்குடா, ஜூன் 3

சீனக்குடாவில பதினைந்து

கள் உருவாகின்றன.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகள் நீர் நிலைகளுக்குள் செல்வதால் அவற்றில் வாழும் மீனும் மற்றும் உயிரினங்களும் அழிந்து போகின்றன.

தொழிற்சாலைகள் பலவற்றிலிருந்தும் நாளாந்தம் எவ்வளவோ புகை வெளியேறிக் காற்றோடு கலக்கிறது.

வாகனங்கள் கக்கும் புகையும் வேறெங்கும் செல்வதில்லை. அதுவும் காற்றோடு கலக்கிறது.

புகை கலந்த அசுத்த காற்றைச் சுவாசிப்பதால் பலரும் நோய்களுக்கு இலக்காக வேண்டி ஏற்படுகிறது.

புகை கலந்த கரியமில வாயு வெப்ப நிலையை அதிகரித்து கால நிலையை மாற்றி விடுகிறது.

கிருமிநாசனிகள், களை கொல்லிகள் ஆகியவை இப்போது விவசாயத் தேவைகளுக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவையும் சூழலைக் கெடுத்து மனிதருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறன.

சுற்றுப் புறங்களில் குப்பை கூளங்களைச் சேர விடுதல், தண்ணீரைத் தேங்கி நிற்க விடுதல் முதலான காரியங்களால் பல தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.

ஒவ்வொருவரும் கவனமாக இருந்தால் சூழல் மாசுறுவதைப் பெருமளவில் தடுக்கலாம். மரங்களை வளர்ப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் சூழலைப் பாதுகாக்கலாம்.

இவற்றைச் சிறு வயதிலிருந்தே அனைவரும் உணரச் செய்ய வேண்டும்.

---

வதில் காலதாமதமும், இழுபறியும் ஏற்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களுடைய வேதனத் தினம் பிரதி மாதாந்தம் 20

## பஸ் சேவை சீர்குலைவு

ஏறாவூர் ஜூன் 3

மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனைக்கான இ.போ.ச. பஸ் சேவை பெரிதும் சீர்குலைந்துள்ளதாகப் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு டிப்போவில் பெருமளவிலான பஸ்களை சேவைக்கு விட முடியாத நிலையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் சேவை சீர்குலைவினால் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்களின் வரவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கடதாசி உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுள்ளதாகவும் காகித ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

(ஐ-073)

## சிங்கள பாடசாலைகளில் தமிழ் போதனை

குருநாகல் ஜூன் 3

குருநாகல், புத்தளம், மாவட்ட சிங்களப் பாடசாலைகளில் தமிழ் கற்பிக்க வடமேல் மாகாண சபை கல்வித் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் அதிகமான சிங்களப் பாடசாலைகளில் கடந்த ஜனவரி முதல் தமிழ் போதிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் சிங்களம் போதிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஐ-138)

---

வழங்கி வருவதாகத் தெரிய வருகிறது.

இதற்குக் காரணம், அங்குள்ள கணக்கியல் கிளையில் போதிய லிகிதர்கள் இல்லாமையும், இருப்பவர்களின் வரவு ஒழுங்கீனமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் குறித்த தினத்தில் வேதனம் பெறும் போது, கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவது வேதனைக்குரியதே.

வாழைச்சேனைக் கோட்ட ஆசிரியர்கள், இனிமேலாவது தமது வேதனத்தை, இழுபறி

இன்றி உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

(இ-073)

---

வயலுவ தேர்தல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு சமரவீர வீரவன்னி இதற்கான நிதியை வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார்.

இக்கட்டிட வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(இ-037)

---

வ...ன்று 5ஆம் திகதி ...ாயக்கிழமை) நடைபெறும்.

வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 75 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு நடைபெறவிருக்கும் விழாவில் விஞ்ஞான கைப்பணிப் பொருட் காட்சி, விஞ்ஞான அறிவரங்கம், பாலர் கலை நிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளன.

விஞ்ஞான பொருட்காட்சியை தென்கல்ல பேக்கரி உரிமையாளர் ஜனாப் டபிள்யூ எம் எம் இல்யாஸ் ஆரம்பித்து வைப்பார்.

மேலும் இவ்விழாவில் வத்தேகம கல்வி அதிகாரி ஜனாப் ஐ

---

விஞ்ஞான கல்வி அதிகாரி ஜனாப் எஸ் எஸ் சருக்டீன், விஞ்ஞான கல்வி ஆலோசகர் ஜனாப் எம் எச் எம் நவாஸ், குண்டசாலை காவல்துறை அதிகாரி திரு ஏ டபிள்யூ பெரேரா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதற்கான நடவடிக்கைகளை வித்தியாலய அதிபர் திரு தேவதாசன் ஜெயசிங் மேற்கொண்டு வருகின்றார்.

(இ-289)

# சாய்ந்தமருது ஆஸ்பத்திரி: குறைகளைத் தீர்க்க வலியுறுத்து

கல்முனை, ஜூன் 3

சாய்ந்தமருது அரசினர் வைத்தியசாலை மற்றும் பிரசவ விடுதி ஆகியவற்றில் பல வருடங்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் குறைபாடுகள் இதுவரை தீர்க்கப்படுவதாக இல்லை என கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் பின்வருமாறு—

* இவ்வைத்தியசாலைக்கென தனியாக "அம்புலன்ஸ்" ஒன்று இல்லை.

* பற்சிகிச்சை நிலையத்திற்கான சகல உபகரணங்களும் இவ் வைத்தியசாலையில் பொருத்தப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் சிகிச்சை அளிப்பதற்கென பல் டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை.

* 1989ஆம் ஆண்டில் மாத்திரம் 987 குழந்தைகள் இவ்வைத்தியசாலையில் பிரசவித்துள்ளன. இவ்வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் உள்ள பிரசவிக்கும் குழந்தைகளை "மூச்சுத் திணறலைத் தடுக்கும் கருவி" கடந்த 3 வருடகாலமாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இது இன்னும் திருத்தப்படவில்லை.

* கடந்த 10 ஆண்டு காலங்களாக இவ்வைத்தியசாலை எதுவித வெள்ளை அடிப்புமின்றி அழுக்கடைந்த நிலையிலும் ஜன்னல்கள் உடைந்தனவாகவும், மின் விசிறி மற்றும் பல்புகள் மலசல கூடங்கள் என்பன பழுதடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

* இவ்வைத்தியசாலையில் 2 உதவி வைத்திய அதிகாரிகள் கடமை புரிவதற்குப் பதிலாக 1 வைத்தியரும், 4 தாதிகள் கடமை புரிவதற்குப் பதிலாக 1 தாதியும், 8 மருத்துவ பெண் ஊழியர்கள் கடமை புரிவதற்குப் பதிலாக 4 பெண் ஊழியர்களும் கடமை புரிகிறார்கள்.

இவ் வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்திய அதிகாரிக்கென (எம் பி பி எஸ் குவார்ட்டஸ்) தங்கும் விடுதி அமைக்கப்படவில்லை. (கிழக்குப் பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில் இவ்வாறு விடுதியில்லாதது இவ்வைத்தியசாலை ஒன்றுதான் எனத் தெரிவிக்கப்படுகின்றது.)

இதுபோன்று உதவி வைத்திய அதிகாரிக்கான விடுதியும் எதுவித திருத்தமும் இல்லாமல் ஆரம்ப கால கட்டத்தில் எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டதோ அவ்வாறு சரித்திர கால கட்டிடம் போன்று காட்சியளிக்கின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

(இ-281)

---

# சமய நிகழ்ச்சிகள்

## திருமலையில் குளிர்த்தி விழா

தம்பலகாமம் ஜூன் 3

திருகோணமலை உவர்மலையில் அமைந்துள்ள கண்ணகி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி (வைகாசி பௌர்ணமி) தினத்தன்று குளிர்த்திவிழா நடைபெறும்.

அன்று மாலை 6 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகும்.

[இ—288]

## வத்துகாமத்தில் தேர் திருவிழா

மடவளை ஜூன் 3

வத்துகாமம் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் தேர்த் திருவிழா 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

6ஆம் திகதி மேற்படி தேர் வீதிவலம் வரும். 7ஆம் திகதி தீர்த்த உற்சவம் நடைபெறும்.

தேவையான நடவடிக்கைகளை முத்துமாரியம்மன் தேவஸ்தான நிர்வாக சபை மேற்கொண்டு வருகிறது.

[இ—431]

---

## வீடமைப்பு கடன்

சினக்குடா, ஜூன் 3

சினக்குடாவில பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முன்பு கடன் பெறாதவர்களுக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை திருகோணமலை வீடமைப்பு அதிகார சபையினர் மேற்கொண்டு இதற்கான படிவங்களும் வழங்கப்படுகின்றன.

இந்த வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் வீடு, கிணறு, மலசலகூடம் ஆகியவை கட்டுவதற்கும், வீட்டு மின் இணைப்புகள் பெறுவதற்கும் இக்கடன் உதவிகளைப் பெறமுடியும்.

(இ-054)

## பாதை திருத்தம்

பதுளை, ஜூன் 3

பதுளை - கோபோ தோட்ட பாதைகளைத் திருத்தியமைப்பதற்கு ஊவா மாகாண சபை நான்கு லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பதுளை காட்டருப்பா கோம்பா நெடுஞ்சாலை பல வருடங்களாக பழுதுபார்க்காத நிலையில் இருந்ததை தினபதி பலமுறை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிதியில் தென்னங்குல - பதுலவத்தை பாதையும் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

(இ-037)

## வருடாந்த விழா

பூண்டுலோயா, ஜூன் 3

மெனிக்கதிவெல - கிரிமிட்டியை எஸ்டேட் ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த தேர்த் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

கரகம் பாலித்தலுடன் ஆரம்பமான இத் திருவிழாவில் விசேட பூசைகளும், ஆராதனைகளும் இடம் பெற்றன.

(இ-243)

இஸ்ரவேல்—கைப்பற்றிய எல்லைகளில்

# ரஷ்ய யூத குடியேற்றம்: கொர்பச்சேவ் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 4

**இஸ்ரவேலில் கைப்பற்றப்பட்ட எல்லைகளில் ரஷ்ய யூதர்கள் குடியேறுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாது போனால் அவர்களது குடியேற்றம் முற்றாகத் தடைசெய்யப் படும்.**

ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இஸ்ரவேலில் ரஷ்ய யூதர் குடியேற்ற விவகாரத்தால் அரபு நாடுகள் மற்றும் உலக நாடுகளின் கண்டனத்துக்கு எமது அரசாங்கம் இலக்காகியுள்ளது.

இஸ்ரவேலில் கைப்பற்றப் பட்ட எல்லைப் பகுதிகளில் யூதர்கள் குடியேறுவதைத் தடுக்க வேண்டும். அவர்கள் குடியேறாதிருக்க விசா வழங்குவதை ஒத்தி வைக்க வேண்டும். இந்த இரு நடவடிக்கைகள் மூலமே குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இவ்வாறு ரஷ்யத் தலைவர் கூறினார்.

எமது நெருக்கடி நிலையை உணர்ந்து அதற்கேற்றவாறு ரஷ்யா செயற்பட வேண்டும் எனவும் கொர்பச்சேவ் கூறினார்.

அமெரிக்காவில் நான்கு தினங்களாக நடந்த வல்லரசுத் தலைவர்கள் உச்சி மாநாட்டின் இறுதி நாளன்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கொர்பச்சேவ் உரையாற்றினார்.

தொலைக் காட்சிக்கான இப் பேட்டியில் அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

[எ]

## 22 பலஸ்தீனர்கள் துருப்புகளால் படுகொலை

ஜெருஸலம் ஜூன் 4

கைப்பற்றப்பட்ட எல்லையில் 22 பலஸ்தீனர்கள் இஸ்ரவேல் துருப்புகளால் கொல்லப்பட்டனர்.

கடந்த மாதம் இக்கொலைகள் இடம் பெற்றதாக அறிவிக்கப் படுகிறது.

உயிரிழந்தவர்களில் 7 பேர் சிறுவர்களாவர். இஸ்ரவேல் மனித உரிமைகள் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)



வி. பி. சிங்—விலி பிராண்ட் சந்திப்பு

மேற்கு ஜெர்மனி முன்னாள் தலைவர் விலி பிராண்ட் அண்மையில் புதுடில்லி விஜயம் செய்த இந்தியப் பிரதமர் வி பி சிங்கைச் சந்தித்தார்— காஷ்மீர் நெருக்கடி தொடர்பாக அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்—

பிரதமர் சிங்கின் அலுவலகத்தில் சந்திப்பு இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

[எ—*ச]

## சுரங்க விபத்தில் 24 பேர் பலி

பாரிஸ் ஜூன் 4

கிழக்கு அல்ஜீரியாவில் இடம் பெற்ற சுரங்க விபத்தொன்றில் 24 பேர் உயிரிழந்தனர்.

நீர்க்குழாய் ஒன்று வெடித்ததால் பெருக்கெடுத்த நீரில் சுரங்கத் தொழிலாளர் மூழ்கியதால் இந்த விபத்து சம்பவித்தது.

(எ)

## பிஜியில் இருந்த இந்திய ராஜதந்திரிகள் திங்களன்று நாடு திரும்பினர்

சூவான், ஜூன் 4

பிஜியில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்த இந்திய ராஜதந்திரிகள் அனைவரும் திங்களன்று புறப்பட்டுச் சென்றனர்—

பிஜி அரசாங்கம் இந்தியத் தூதரகத்தை மூடும்படி அண்மையில் பணித்தது—

புதுடில்லி அரசாங்கம் பிஜி அரசாங்கத்துடன் நட்புறவைத் துண்டிக்கும் விதத்தில் செயல்பட்டு வந்ததால் தாம் இந்தியாவுடனான உறவைத் துண்டித்துக் கொண்டதாக பிஜி அரசு தெரிவித்தது—

கடந்த மே 23 ஆம் திகதி பிஜி அரசாங்கம் இந்திய தூதரகத்தை மூடும் உத்தரவைப் பிறப்பித்தது. 24 மணி நேர அவகாசத்தையும் வழங்கியது—

இந்திய ராஜதந்திரிகள் 14 தினங்களில் வெளியேற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

இறுதியாக 33 ராஜ தந்திரிகளும் அவர்களது குடும்பத்தினரும் திங்கட்கிழமை காலையில் சிட்னி மார்க்கமாக பிஜியிலிருந்து இந்தியா பயணமானார்கள்.

22 பேர் கொண்ட குழுவொன்று வெள்ளியன்று புறப்பட்டுச் சென்றது—

(எ)

## கொலம்பியாவில் 319 பொலிஸார் படுகொலை

பொகோட்டா, ஜூன் 4

இவ்வாண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை 319 பொலிஸார் கொலம்பியாவில் கொல்லப்பட்டுள்ளனர்.

கொக்கேன் என்னும் போதைப் பொருளுக்குப் பெயர்போன மெடலின் நகரிலேயே இவ்வளவு எண்ணிக்கையிலான பொலீஸார் கொல்லப்பட்டிருக்கின்றனர்—

(எ)

# உலகச் செய்திகள்

## கி. ஐரோப்பாவில் இடம்பெறும் மாற்றங்கள் குறித்து அச்சம்

### அபி. அடைந்து வரும் நாடுகள் பாதிப்படையுமென அறிவிப்பு

கோலாலம்பூர் ஜூன் 4

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வர்த்தகத் தடையை ஏற்படுத்திவிடும். இவ்வாறு மலேஷியாவில் நடந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான உச்சி மாநாட்டில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஜி—15 என்றழைக்கப்பட்ட மேற்படி உச்சிமாநாடு மூன்று தினங்கள் மலேஷியாவில் தொடர்ந்து நடைபெற்றது. இறுதி நாள் மாநாட்டின் போதே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக உலக வர்த்தகத்துறை சிறந்த ... அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பங்கு கொண்டன.

(எ)

## சீனாவில்—குழப்பங்களை தவிர்க்க

# தியன் அன் மென் சதுக்கம் சீல் வைப்பு

பீக்கிங் ஜூன் 4

சீனாவில் தியன்அன்மென் சதுக்கம் சீல் வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நலன் கருதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி சதுக்கம் சீல் வைக்கப்பட்டது.

தியன்அன்மென் சதுக்கத்தில் ஜனநாயகப் போராட்டம் ஒன்று கடந்த ஜூன் மாதத்தில் இடம் பெற்றது தெரிந்ததே. இந்தச் சம்பவத்தின் போது ஜனநாயகப் போராளிகள் நசுக்கப்பட்டனர்.

நேற்று 3ஆம் திகதி இப் போராட்டம் நடந்து ஒரு வருடம் பூர்த்தியாகிறது. தியன்அன்மென் சதுக்கத்தில் அறிவித்தல் ஒன்றைக் கட்டித் தொங்க விட முயன்ற ஒருவர் ஞாயிறு கைதானார்.

இதையடுத்தே மேற்படி சதுக்கம் சீல் வைக்கப்பட்டது.

40 வயது மனிதர் ஒருவர் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தியன்அன்மென் சதுக்கம் அமைந்திருந்த பாதையால் போவோர் வருவோரை மறித்து குழப்பம் விளைவிக்க முயன்றதாகவே இவர் கைதானார்.

இதேவேளையில் தியன் அன் மென் சதுக்க சம்பவத்தை நினைவு கூரும் விதத்தில் தாய்வானிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

ஞாயிறன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் பங்கு கொண்டனர்.

டோக்கியோவில் 400க்கு மதிகமானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் கலந்து

## காஷ்மீர் நிருபர் யூசுப் ஜமீல் விடுதலை

ஸ்ரீநகர் ஜூன் 4

30 மணிநேரம் இராணுவ பாதுகாப்பில் இருந்த காஷ்மீர் நிருபர் யூசுப் ஜமீல் (32 வயது) ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபன நிருபராகவும், பிரிட்டிஷ் ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் (பி பி ...

...றது.

ஸ்ரீநகர் இல்லத்திலிருந்து இவர் கடத்திச் செல்லப்பட்டார்.

இராணுவ உடை தரித்து வந்த கோஷ்டியொன்றே இவரைக் கடத்தியிருந்தது.

(எ)

## கொர்பச்சேவ்

# அரச அதிகாரிகள்

...டத்தை அமைப்பதற்கு முழுமூச்சாகப் பாடுபட்டவர், திருவாமதேவனாகும்— இன்று இந்த அலுவலகம் திருவாமதேவனின் நினைவாகத் திகழ்கிறது—

# சுயநலம் கருதாது சேவையாற்ற வேண்டும்

## வடக்கு கிழக்கு பிரதம செயலாளர்

தமபலகாமம் ஜூன் 3

உணவு வர்த்தக கடற்றொழில் போன்ற துறைகளில் எமது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும- அதற்கு அரசாங்க அதிகாரிகள் சுயநலம கருதாத சேவை புரிய வேண்டும-

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரும ஆளுநரின் செயலாளருமாகிய திரு சொ குணேசநாதன் இவ்வாறு கூறினார்-

உட்துறை வீதியில் 15 லட்சரூபா செலவில் அமைக்கப்பட்ட உணவு வர்த்தக கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது-

இத் திறப்பு விழாவில் வைத்த உரையாற்றிய பிரதம செயலாளர் மேலும் கூறியதாவது—

இந்த அலுவலகக் கட்டி

திகழ்கிறது-

இதே போன்ற ஏனைய செயலாளர்களும் தங்கள் அமைச்சுக்குத் தேவையான அலுவலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும-

கடலோரப் பிரதேசத்தில் எமது வடக்கு, கிழக்குப் பகுதி 60 சதவீதத் றொழிலை வளமபடுத்துவதற்கு நாம அயராது உழைக்க வேண்டியுள்ளோம-

அதேபோன்ற விவசாயத் துறையையும விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும என்றார்-

மேற்படி அமைச்சின் செயலாளர் திரு எஸ் தில்லைநாதன் இங்கு வரவேற்புரை நிகழ்த்தினார்-

[இ—கு]

## இளைஞர் தற்கொலை

நீர்கொழும்பு, ஜூன் 3

ரயிலின் முன்னால் பாய்ந்த முஸ்லிம வாலிபர் ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார்.

இப்பரிதாபச் சமபவம நீர்கொழும்பு பெரிய முல்லையில் அண்மையில் நடைபெற்றது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்ட மன விரக்தியினாலேயே இவர் ரயில் முன் பாய்ந்தார் என்று விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

(எ-223)

உலக வர்த்தகத்துறை சிறந்த முறையில் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயினும கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும மாற்றங்களால் அபிவிருத்தி அடைந்து வரும நாடுகளே ஆபத்தை எதிர்நோக்க நேரிடும.

இவ்வாறு உச்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மலேஷியாவில் 3 தினங்கள் நடந்த உச்சி மாநாட்டில் 15,

பரப்புக் கூட்டுத்தாபனம் (பி பி ஸி) மற்றும டைம சஞ்சிகை ஆகியவற்றின் நிருபராகவும ஜமீல் கடமையாற்றுகிறார்.

இந்திய எல்லைப் புறத்தில் அமைந்துள்ள கூர்க்கா படைப் பிரிவு முகாமொன்றுக்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் பராமுலா நகருக்கு அழைத்து வரப்பட்டு ஞாயிறு பி பகல் விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகி

# 5 ஆவது இஸ்லாமிய தமிழ் மாநாடு

## டிசம்பரில் நடைபெறும்

கொழும்பு, ஜூன் 4

ஐந்தாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் மாநாடு எதிர்வரும டிசமபர் மாதம தென் இந்தியாவின் கீழக்கரையில் நடைபெறும-

டிசமபர் மாதம 28ஆம, 29 ஆம 30 ஆம திகதிகளில் நடைபெறும இம மாநாட்டில் இலங்கைப் படைப்பிலக்கிய கர்த்தாக்களுக்கு அறிஞர்களுக்கும கல்விமான்களுக்கும பங்குபெற சந்தர்ப்பம எடுத்துக் கொடுக்கப்படும-

இதற்காக இம மாநாட்டின் இலங்கை அமைப்புக் குழுத் தலைவர் டாக்டர் எம எம உவைஸ் முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் உடன் பேச்சுவார்த்தை நடத்தினார்-

இந்த சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பீ பீ தேவராஜ் உடனும தொடர்பு கொண்டு தேவையான உதவிகள் (அவ் அமைச்சின் மூலம) பெற்றுத் தரப்படும-

இப் பேச்சுவார்த்தையின் போது அஸ்வர் இவ்வாறு அவரிடம கூறினார்-

கீழக்கரை அனைத்து ஜமாஅத்தினரும இந்த மாநாட்டை வெற்றிகரமாக முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவிருக்கின்றனர்-

மாநாட்டின் போது சமர்ப்பிக்கப்படும ஆய்வுக் கட்டுரைகள் கவிதைகள், படைப்பிலக்கியங்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும- பண்டைய நூல்களைப் புதுப்பிக்க முடியாமல் வசதியற்றிருக்கும எழுத்தாளர்களுக்கு அவர்களின் ஆக்கங்களைப் புதிப்பித்து வெளியிட மாநாடு உதவி செய்யும-

கீழக்கரை மாநாட்டு அமைப்பாளராக கேப்டன் என் ஏ அமீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார்-

பிரஸ்தாப மாநாட்டிற்கு இலங்கையில் இருந்து ஆய்வுக் கட்டுரைகள், வரலாற்று நூல்கள் கவிதைகள் வெளியிட விரும்புவோரும சமர்ப்பிக்கவிருப்போரும பாணந்துறையைச் சேர்ந்த பேராசிரியர் எம எம உவைஸை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது-

[இ-007]

## கொர்பச்சேவ் விஜயம்

மினபோலீஸ் ஜூன் 4

ரஷ்ய தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் ஞாயிறு இரவு சன் பிரான்சிஸ்கோ பயணமானார்-

மினசொட்டா நகரில் 7மணி நேரம் தரித்திருந்த ரஷ்ய தலைவரும அவரது பாரியாரும அங்கிருந்தே சன்பிரான்சிஸ்கோ பயணமானார்கள்-

[எ]

ஊர்வலமொன்றில் கலந்து கொண்டனர். இவர்களில் அரைவாசிப் பேர் சிறுவர்களாவர்.

(எ)

## குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத் ஜூன் 4

சிந்து மாகாணத்தின் அண்மைக் கால குழப்பங்களுக்குக் காரணம இந்தியா என பாகிஸ்தான் ஆளும மக்கள் கட்சி கண்டித்திருக்கிறது.

(எ)

# சரணடைந்த சந்தேக நபர்கள் 8 பேருக்கு மறுவாழ்வு

## ஒருவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூன் 4

பொலனறுவை மாவட்ட சரண் குழுவிடம சரணடைந்த தீவிரவாத சந்தேக நபர்களில் ஒருவர் விசாரணையின் பின் அவரது பெற்றோரிடம ஒப்படைக்கப்பட்டார். மேலும் எட்டுப் பேர் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்-

இத்தகவலை சுதந்திர சரண் குழு வெளியிட்டது-

பொலனறுவை சரண் மகாநாகரில் இதுவரை 24 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்துள்ளனர். இவர்களில் 18 பேர் மீது மாவட்ட விசாரணை குழு விசாரணை நடத்தியுள்ளது.

விசாரணையின் பின்னரே ஒருவர் விடுதலை செய்யப்பட்டதோடு எண்மர் மறுவாழ்வுக்கு சிபாரிசு செய்யப்பட்டனர். ஏனையோர் பேரில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட வேண்டும-

இவ்வாறு விசாரணைக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ஜெல்டன் பெரேரா உத்தரவிட்டார்.

பொலனறுவையில் சரணடைந்துள்ள இளைஞர்களில் ஒருவர் ஊவா மாகாண பாடசாலை ஒன்றின் மாணவர் தலைவராவார். இவர் பாடசாலை கிரிக்கெட் அணியின் தலைவராகவும் கடமையாற்றியிருக்கிறார் சரணடைந்தவர்களை மேலும் [illegible] ஆடங்குவர்.

(இ-032)


# தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217, ஒல்கொட் மாவத்தை கொழும்பு—11.

தொலைபேசி- 23981—84.

தனியாரிடமிருந்து

# ஆயுள்வேத மருந்துகளை

# கொள்வனவு செய்ய தடை

## ஆஸ்பத்திரிகளின் தேவைக்கு

### கூ. தாபனத்தை நாடும்படி உத்தரவு

கொழும்பு, ஜூன் 4

அரச ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான மருந்துவகைகளைத் தனியார் துறையினரிடம் இருந்து கொள்வனவு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் சகல ஆயுள்வேத மருந்துகளையும் ஆயுள்வேத மருந்துப் பொருள்கள் கூட்டுத்தாபனத்திடம் இருந்தே கொள்வனவு செய்ய வேண்டும்.

ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் அதிபர்களுக்கும் மாகாண சபை ஆயுள்வேத ஆணையாளர்களுக்கும் இவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

27 வகையான ஆயுள்வேத மருந்து வகைகளை இக் கூட்டுத்தாபனம் கட்டாயமாக உற்பத்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ஆயுள்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஆயுள்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனப் பணிகள் மறுசீரமைக்கப்படும்.

இவ்வாறு சுதேச வைத்திய அமைச்சர் திரு எச் பி வன்னிநாயக்கா கூறினார்.

(எ-007)

திரும்பிப் போக வேண்டும் என்ற,

## நிபந்தனையுடன் இங்கு வந்த

### முதலாவது படை இந்தியப்படையே

### சட்டக்கல்லூரி மாணவர் மத்தியில் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூன் 4

சரித்திர காலம் முதல் இலங்கை 17 இந்திய படையெடுப்புகளைச் சந்தித்துள்ளது. பெரும்பாலும் சேரர், சோழர், பாண்டியர் மற்றும் பல்லவ அரசுகளே இலங்கையின் மீது படையெடுப்புகளை நிகழ்த்தின.

ஆனால் திரும்பிப் போக வேண்டும் என்ற நிபந்தனையுடன் இங்கு காலடி வைத்த முதலாவது படை இந்தியப் படையாகும்.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படை இலங்கை வந்தது.

இலங்கை சட்டக்கல்லூரி மாணவர்கள் சங்கத்தில் முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்தன உரையாற்றினார்.

அப்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஜயவர்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கி மு 544 ஆண்டிலிருந்து

இலங்கை இந்திய உடன்படிக்கை இரு நோக்கங்களை உள்ளடக்கியதாகும். இலங்கையின் ஒற்றுமை, இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதும், வடக்கு கிழக்கில் வாழும் சகல இனத்தவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் மேற்படி இரு நோக்கங்களாகும்.

ஆனால ஆயுதங்களைக் கையளிப்பதாக முன்னர் வாக்களித்திருந்த ஆயுத குழுவினர் பின்னர் தமது முடிவை வருந்தத்தக்க பின்வாங்கியதால் இந்திய சமாதான படையினர் புதிய ஒரு கடமையைச் செய்ய வேண்டிய நிலைக்குள்ளாயினர்.

இதனால் வடக்கு கிழக்கு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமுகமாக இலங்கை வந்த இந்தியப் படையினர் அம்மக்களின் ஒரு பகுதியினரோடு போரிட வேண்டிய சூழ்நிலை

முடிவு முன் அனுமதியின் பொருட்டு நாடாளுமன்றத்துக்கோ அமைச்சரவைக்கோ சமர்ப்பிக்கப்பட முடியாது. இம்மாதிரியான முடிவுகளுக்கு முன் அனுமதி தேவையில்லை. இந்தியப் படையை திருப்பி அனுப்புவது என்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் முடிவும் கூட இவ்வாறானதுதான்.

இவ்விரு முடிவுகளும் 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கைக்கு இணக்கமானவைகளே.

ஆபத்தான தருணத்தில் ஏனைய நாடுகளிடம் உதவி கோருவது என்பது ஒன்றும் புதியதல்ல, ஹிட்லரை முறியடிப்பதற்கு 1939 ஆம் ஆண்டு இங்கிலாந்தும் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவிடம் உதவி கோரின.

அப்போது கூட ஐரோப்பாவில் அமெரிக்க படைகள் உள்ளன. இங்கிலாந்தில் மட்டும் அறுபது வீரான தளங்களை

## வன வளத்தை

### பாதுகாப்பது

### விவசாயிகளின் கடமை

### ஏறாவூர் உதவி அரச அதிபர்

ஏறாவூர் ஜூன் 3

வன வளத்தைப் பாதுகாப்பது விவசாயிகளின் கடமையாகும். வனம் அவர்களது அழியாச் சொத்தாகும்.

ஏறாவூர் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் கனகரெத்தினம் இவ்வாறு கூறினார்.

வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் அண்மையில் விவசாயிகளின் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இங்கு அவர் மேலும் கூறியதாவது—

ஒரு நாட்டின் சொத்தாக விளங்குவது வனவியல் பகுதியாகும். வனமானது மண்ணைப் பாதுகாப்பதோடு வன விலங்குகளின் புகலிடமாயும் விளங்குகிறது.

அத்துடன் நாட்டின் கால நிலை மாற்றங்களையும் வனங்களே தீர்மானிக்கின்றன. எனவே விவசாயிகள் கூடிய வரை காட்டு மரங்களை வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

மேற்படி கருத்தரங்கில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டதோடு விவசாயிகளின் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வுகளும் காணப்பட்டன.

[இ—073]

## ரூ 11 லட்சம்

### நிதி ஒதுக்கீடு

மாத்தறை ஜூன் 3

மாத்தறை மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் தோட்டக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 6 தோட்டங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும், சனசமூக நிலையங்களை நிர்மாணிக்கவும் 11 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி, ஒதுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்ட ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுவீடன் நிதி உதவியிலிருந்து இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-430)

## திகழி முஸ்லிம்

### வித்தியாலயத்திற்கு

### விஞ்ஞான ஆய்வுகூடம்

### அஸ்வர் நடவடிக்கை

புத்தளம் ஜூன் 3

புத்தளம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த திகழி அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்திற்குப் புதிய "மினி" விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்று கிடைக்கவுள்ளது.

புத்தளம் தொகுதி சிறுபான்மை மக்களின் நலன்களைக் கவனிக்க பொறுப்பாக நியமிக்கப்பட்டவரும் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சருமான அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு விஞ்ஞானம் போதிக்க ஆசிரியர் இருந்தும் ஆய்வு கூட வசதிகள் இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது.

இக் குறையை பாடசாலை அதிபர் ஜனாப் ஏ அபூஹனிபா அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் அஸ்வர் உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

விரைவில் இங்கு "மினி" விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் இவ்வித்தியாலயத்தின் நீண்ட நாள் தேவையொன்று தீர்த்து வைக்கப்படவுள்ளது.

[இ—241]

## மக்களும் பதவியும்

### பள்ளிவாசல்

### நிர்வாகிகள்

மடவளை ஜூன் 3

மடவளை ஜாமியுள் கைராத் ஜும்மாப் பள்ளிவாசலின் புதிய நிர்வாக சபையின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்— அல்ஹாஜ் ஏ எம் றவுப் உபதலைவர்கள்;— அல்ஹாஜ் ஏ எஸ் எம் கியாஸ். மௌலவி எம் எச் எம் புர்ஹான் [பஹ்ஜி]

இணைச் செயலாளர்கள்— ஜனாப்களான ஏ ஆர் எம் முஹாரிஸ் ஏ எம் ஹாபில்

பொருளாளர்— ஜனாப் எம் எச் எம் லுக்மான்,

மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்களாக ஜனாப்கள் ஏ டபிள்யூ எம் மிஹ்லார் எஸ் ஏ ஆர் எம் நைருதீன் ஏ எம் சாஹிர் ஏ ஆர் எம் நைருதீன் எஸ் எம் மலீக் ஏ ஏ எம் புஹாரி முகம்மத் ஹனிபா அல்ஹாஜ் ஏ ஆர் எம் நாசிம் ஆகியோர் தெரிவாகினர்.

[இ—431]

### செயற் குழு

### உறுப்பினர்கள்

தம்பலகாமம் ஜூன் 3

அரசாங்க எழுதுவினைஞர் சங்க திருகோணமலைக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்;— திரு கோ சற்குணலிங்கம் உபதலைவர்— திருமதி ஈ லூயிஸ்,

செயலாளர்— திரு எம் சந்திரமோகன்.

பொருளாளர்— திரு கே சந்திரசேகரம்.

ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

[இ—288]

எந்து ஆட்சேபனையையும் மீறி

# வெள்ளரப்பம் செய்து

திரு ஜயவர்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கி.மு. 544 ஆண்டிலிருந்து இலங்கை மீது 21 தடவைகள் படையெடுப்புகள் நடைபெற்றன. இவற்றில் 17 இந்திய படையெடுப்புகளாகும். இலங்கையில் பிரிட்டிஷ் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை இவ்வாறான அந்நியப் படையெடுப்புகள் தொடர்ந்தன. இவ்வாறான படையெடுப்புகள் நிகழும்போது இலங்கை மன்னர்கள் வேறு ஒரு தென்னிந்திய மன்னரின் உதவியை நாடுவது வழக்கமாக இருந்தது.

ஆனால் தனியொரு ஆட்சியின் கீழ் இந்திய உபகண்டம் வந்த பின்னர் வேறு ஒரு இந்திய அரசரின் உதவியை நாடுவதற்கான வசதி இல்லாமற் போனது.

1815 ஆம் ஆண்டு கண்டி ராச்சியம், கண்டி உடன்படிக்கையின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அந்த உடன்படிக்கையின் கீழ் பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கவும், கண்டி உயர் அதிகாரிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் பிரிட்டிஷார் இணக்கம் தெரிவித்தனர்.

ஆனால் 1818 ஆம் ஆண்டு கண்டி கலவரத்தோடு உடன்படிக்கையின் இந்த அம்சங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் காற்றில் பறக்கவிட்டது. தனது ஆட்சியின் கீழ் இலங்கையைக் கொண்டு வந்தது.

ஆனால் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை அரசியல் ரீதியானதாகும். இந்த உடன்படிக்கையை அமைச்சரவையும், அரசாங்க நாடாளுமன்றக் குழுவும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவும் ஏற்றுக் கொண்டன.

இந்த உடன்படிக்கையின் கீழான சட்டம் உயர் நீதிமன்றத்தாலும் நாடாளுமன்றத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியப் படையினர் அமைக்கு(?)ள் ஒரு பகுதியினரோடு போரிட வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இந்தியா இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவென ஐயாயிரம் கோடி ரூபாவைச் செலவிட்டது. ஆயிரத்து 200 இந்திய வீரர்களுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், ஐயாயிரம் வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தியப் படையினர் ஜனாதிபதி பிரேமதாசாவின் வேண்டுகோளை அடுத்து நாட்டை விட்டு அகன்றனர். ஜனநாயக நீரோட்டத்தில் இணைவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர், பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் சம்மதித்தனர்.

இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்டு விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒரு இராணுவ ரீதியான முடிவாகும். இலங்கை இந்திய உடன்படிக்கையின் கீழ் நாட்டின் பிரதம பாதுகாப்புப் படைத் தலைவர் என்ற ரீதியாக ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்தன இவ்வேண்டுகோளை விடுத்தார்.

ஒரு இராணுவ ரீதியான வில் அமெரிக்க படைகள் உள்ளன. இங்கிலாந்தில் மட்டும் அறுபது விமான தளங்களை அமெரிக்கா வைத்திருக்கிறது.

இந்தோ - சீன போரின் போது தமக்கு உதவுமபடி ஜவஹர்லால் நேரு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்தார், அமெரிக்கர்கள் இரண்டாண்டுகளாக தமது படைகள் மற்றும் விமானங்கள் சகிதம் புதுடில்லியில் தங்கியிருந்தனர்.

இவ்வாறு கூறினார் திரு ஜே ஆர் ஜயவர்தனா.

வடக்கில் உணவுப் பொட்டலங்கள் வீசப்பட்டதை நாட்டின் இறைமையை மீறும் ஒரு செயலாகவே தாம் கருதியதாக ஜே ஆர் கூறினார்.

திரு ராஜீவ்காந்தி கொழும்பில் கலந்து கொண்ட வைபவமொன்றில் இதை வெளிப்படையாகவே தான் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்,

நடந்த சம்பவத்தை மன்னித்தாலும், அதனை மறக்க மாட்டேன் என்று திரு ராஜீவ்காந்தியிடம் நான் தெரிவித்தேன், என்றும் ஜே ஆர் மேலும் கூறினார்.

(எ-032)

## வடமேல் மாகாணத்திற்கு தனியான கல்விக் கொள்கை

குருநாகல் ஜூன் 3

வடமேல் மாகாணத்துக்கு தேவையான தனியான கல்விக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வடமேல் மாகாண சபை முதல் அமைச்சர் திரு காமினி ஜெயவிக்கிரம பெரேரா கூறினார்.

வடமேல் மாகாண முதல் அமைச்சரின் குருநாகல் அலுவலகத்தில் அண்மையில் கல்வித் திட்டக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:

குருநாகல் புத்தளம் மாவட்ட தமிழ் சிங்கள முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கு சிறந்த நிர்வாகப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளில் சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமேல் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளின் குறைபாடுகள் மிக விரைவில் தீர்த்து வைக்கப்படும்.

[இ-138]

# ஆள்மாறாட்டம் செய்து (இறந்தவர் பெயரிலும்) வாக்களிப்பு

## வாக்குச்சாவடி பணியாளர் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 4

எட்டியாந்தோட்டை சிறிவர்த்தன மகளிர் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் சுதந்திரக் கட்சி சார்பாக நான் கடமையாற்றிக் கொண்டிருந்த போது இறந்து போன ஒருவர் பெயரால் நபர் ஒருவர் வாக்களித்தார்.

எனது ஆட்சேபனையையும் மீறிய இவர் ஆள்மாறாட்டம் செய்து வாக்களித்தார். இச்சாவடியில் பதிவு செய்யப்படாத இருவர் இங்கு எனது ஆட்சேபனையையும் மீறி வாக்களித்துச் சென்றனர். இம்மூன்று சம்பவங்களின் பின்னர் நான் என் கடமைகளைச் செய்வதை நிறுத்தினேன்.

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணையின் போது மனுதாரர் தரப்பில் தோன்றி சாட்சியமளித்த ஆர் ஏ தயா ஜயவர்த்தன இப்படித் தெரிவித்தார்.

திரு பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிய வெற்றி செல்லுபடியாகாது என்று தெரிவித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க நீதியரசர்கள் எச் டி தம்பையா ஜி பி எஸ் டி சில்வா எம ஜமீல் பி இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தான் வெளியே வந்ததும் தன்னைக் கடத்திச் செல்ல ஒரு குழுவினர் காத்திருப்பதாகத் தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் இதனால் மாலை நான்கு மணிவரை வாக்குச் சாவடியினுள்ளேயே தங்கியிருந்ததாகவும் இவர் தனது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு

முதலில் எட்டியாந்தோட்டை இங்கினியாகலத்தைச் சேர்ந்த எச் எல் கருணாசேன சாட்சியமளித்தார். சாட்சியத்தை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி பேர்சி விக்ரமசேகர நெறிப்படுத்தினார்,

சட்டத்தரணி— இங்கினியாகலத்தையில் நீர் எவ்வளவு காலமாக வாழ்ந்து வருகிறீர்?

சாட்சி— அங்குதான் வாழ்ந்து வருகிறேன். 1982 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியில் சேர்ந்தேன். 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்காகப் பிரசாரம் செய்தேன்.

சட்டத்தரணி;— 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதியை உம்மால் நினைவு கூர முடியுமா?

சாட்சி;— ஆம். ஆதரவாளர்களுடன் அன்று கட்சிக் காரியாலயத்தில் இரவு பத்து மணி வரை இருந்தேன்.

சட்டத்தரணி;— அன்று ஏதாவது நடைபெற்றதா?

சாட்சி;— ஆம். இரவு பத்து மணியளவில் இரு பஜேரா ஜீப்புகளும் இரு கார்களும் மேலும் ஒரு ஜீப்பும் அங்கு வந்தன, சுமார் நூறு பேர் வரை அவ்வாகனங்களில் காணப்பட்டனர். எமது காரியாலயத்தை நோக்கி அவர்கள் சத்தமிட்டனர்.

சட்டத்தரணி— எங்கிருந்தபடி இதை நீர் பார்த்தீர்?

சாட்சி— காரியாலயத்தின் உள்ளே இருந்த நான் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். எமது காரியாலயத்தில் இருந்து 300 யாருக்கு அப்பால் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்து இறங்கிய நபர்கள் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். சிலர் சத்தமிட்டபடி எமது காரியாலயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சட்டத்தரணி— அச்சமயம் கட்சிக் காரியாலயத்தில் எத்தனை பேர் இருந்தனர்?

சாட்சி— ஐந்து அல்லது ஆறு பேர் இருந்தனர். நால்வரின் பெயர்களே எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

சட்டத்தரணி— குணசேகர என்பவர் அங்கிருந்தாரா?

சாட்சி— ஆம அவர் பெயர் சிசிர குமார குணசேகரவாகும்,

சட்டத்தரணி— அவர்கள் கட்சிக் காரியாலயத்தை நெருங்கியதும் நீங்கள் அனைவரும் என்ன செய்தீர்கள்?

சாட்சி— கதவை மூடினோம்.

சட்டத்தரணி— பின்னர் என்ன நடந்தது?

சாட்சி— அவர்கள் கதவை தட்டியபடி கதவைத் திறந்தீர்களானால் கொலை செய்யப்படுவீர்கள் என்று சத்தமிட்டனர். நாம் பின் கதவு வழியாக வெளியேறி பற்றை மறைவில் ஒழிந்து கொண்டோம்,

அரை மணித்தியாலமாக அங்கு ஒளிந்திருந்த போது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தத்தைக் கேட்க முடிந்தது.

அவர்கள் திரும்பிச் சென்றதும் காரியாலயத்திற்குச் சென்றோம். தளவாடங்களும் கதவும் சேதமாக்கப்பட்டிருந்ததை கண்டோம், காரியாலய பெயர்ப் பலகை அகற்றப்பட்டிருந்தது. சுவரொட்டிகளின் ஒரு பகுதி கிழித்துப் போடப்பட்டிருந்தன, மிகுதி எரிக்கப்பட்டிருந்தன.

சட்டத்தரணி— வந்தவர்களை நீர் அடையாளம் கண்டு கொண்டீரா?

சாட்சி— அவர்கள் எமது பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லர், எட்டியாந்தோட்டையைச் சேர்ந்தவர்கள்.

[விசாரணை தொடரும்]

[ஏ—032]

நாற்பது நாடுகள் பங்குபற்றும்,

# உலக ஸ்னூக்கர் போட்டி

# இலங்கையில் நடைபெறும்

கொழும்பு, ஜூன் 4

உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும்.

இந்த சர்வதேச மட்டப் போட்டியில் சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் நடைபெறவிருப்பது 17ஆவது உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியாகும். இவ்வகையிலான ஒரு சர்வதேச ஆட்டம் இப்போதுதான் இலங்கையில் முதல் தடவையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஆசிய மட்ட ஆட்டங்கள் இலங்கையில் நடத்தப்பட்டிருப்பதால் வெற்றிகரமாக இப்போட்டியையும் தம்மால் நடத்தக் கூடியதாக இருக்கும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் இப்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலக பில்லியட்ஸ் சாம்பியனாக மொஹமட் லாபிர் தெரிவு செய்யப்பட்டதால் ஸ்னூக்கர் அரங்கில் இலங்கையின் பெயர் பிரபலம் பெற்றது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் இந்த சாம்பியன்ஷிப்பில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஸ்னூக்கரில் முன்னணி வகிக்கும் பல நாடுகளின் பிரசித்தி பெற்ற வீரர்கள் கலந்து கொள்வார்கள். இந்நாடுகளின் அணிகளைச் சந்திக்கக் கூடியதாக இலங்கை அணி ஆயத்த நிலைக்கு தயாராகிறது.

இதேசமயம் இலங்கை ஸ்னூக்கர் சம்மேளனத்தின் தலைவர் ஜகத் சுமதிபால உலக ஸ்னூக்கர் சம்மேளனத்தின் அடுத்த தலைவராகத் தெரிவு செய்யப்படலாம் என சம்மேளன வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

(ரி-032)

## பாடசாலை ஹொக்கி அணி வெற்றியோடு வருகை

கொழும்பு, ஜூன் 4

பன்னிரெண்டு ஆண்டு கால இடைவெளியின் பின்னர் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை பாடசாலை மாணவ ஹொக்கி அணியினர் வெற்றிப்பெருமிதத்துடன் நாடு திரும்பியுள்ளனர்.

இந்நாடுகளில் இடம்பெற்ற ஹொக்கி போட்டிகளில் இலங்கை அணியினர் ஐந்து ஆட்டங்களில் வெற்றியீட்டினர். மூன்று ஆட்டங்களை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்ட அணியினர் மூன்று ஆட்டங்களில் தோல்வியடைந்தனர். (ரி-032)

## தோப்பூரில் நடந்த கொத்தணி போட்டி

மூதூர், ஜூன் 3

தோப்பூர் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் தோப்பூர் அல்-ஹம்றா மகா வித்தியாலய விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

தோப்பூர் கொத்தணி அதிபர் ஜனாப் ஸெய் சித்தி மொகமட் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மூதூர் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எச் எம் கரீம் கலந்து கொண்டார்.

மேலும் இவ்விளையாட்டுப் போட்டியில் அதிதியாக கல்வி அதிகாரி திரு ஆ குணராசரெட்ணமும் கலந்து கொண்டார்.

(ரி-401)

விளையாட்டு பகுதி

## தர்ம ஜெயா அணி சாம்பியனானது

பதுளை, ஜூன் 3

பதுளை பீலகூடே விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு ஆறு பேர் கொண்ட அகில இலங்கை மென்பந்து கிரிக்கெட் போட்டியில் குருனாகலையைச் சேர்ந்த தாம ஜெயா கோஷ்டி சாம்பியனானது.

இறுதிப் போட்டியில் குருனாகலை தர்மஜெயா கோஷ்டி, நுவரெலியா புளூ ஸ்டார் கோஷ்டியை நான்கு விக்கெட்டுகளால் தோற்கடித்துச் சாம்பியனானது.

கடந்த ஞாயிறன்று பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டிகளில் பதுளை, பசறை, லுணுகலை, பண்டாரவளை, ஆப்பல, வெளிமடை, நுவரெலியா, கம்பளை, குருனாகலை ஆகிய பிரதேசங்களிலிருந்து 38 கோஷ்டிகள் கலந்து கொண்டன.

அரையிறுதி போட்டியில் புளூ ஸ்டார் கோஷ்டி, பண்டாரவளை கொஸ்மே கோஷ்டியையும், தர்மஜெயா கோஷ்டி பதுளை மத்திய மகா வி கோஷ்டியையும் தோற்கடித்து இறுதிப் போட்டியில் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் புளூ ஸ்டார் கோஷ்டி நான்கு ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றது.

தர்மஜெயா கோஷ்டி நான்கு ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 15 ஓட்டங்களைப் பெற்று சாம்பியனானது.

பதுளை டி ஐ ஜீ திரு டெறி அமரசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசுகளையும் வழங்கினார்.

(ரி-037)

## பதுவெளை கழகம் தையல் நிலையம் அங்குரார்ப்பணம்

வெலிகாமம், ஜூன் 3

வெலிகாமம் பதுவெளை விளையாட்டுக் கழகம் முஸ்லிம் பெண்களுக்கு என கல்பொக்கையில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வருகிறது.

வெலிகாமம் புகாரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களில் ஒருவரும், கல்வி அதிகாரியுமான மௌலவி எம் எச் எம் ஜவ்பர் இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

(ரி-331)

# தேசியக் கல்விக் கொள்கைக் குழு

கொழும்பு, ஜூன் 4

தேசியக் கல்விக் கொள்கையை வகுப்பதற்காகத் தேவைப்படும் சகல அம்சங்களும் சகல துறைகளில் இருந்தும் திரட்டப்படும்.

இதற்காக ஒரு குழு நியமிக்கப்படும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இவ்வாறு தீர்மானித்திருக்கிறார்.

நாடாளுமன்ற ஆலோசனைக் குழு மூலமும் இதுபற்றிய கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட விவரங்களையும், காரணங்களையும் திரட்டும் போது இளைஞர் விரக்திக்குரிய காரணிகளையும் ஆராயும் இக்குழுவின் சிபார்சுகளையும் கவனத்துக்கு எடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

(ரி-007).

## காணி வழங்க கோரிக்கை

நீர் கொழும்பு ஜூன் 2

நீர்கொழும்பு சென் லாஸரஸ் வீதியில் உள்ள நீர்கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணியை நீர்கொழும்பு வை எம் எம் ஏ யினைக்கு வழங்க வேண்டும்-

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்றை நீர்கொழும்பு மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர் ஜனாப் எம் எஸ் எம் ஹலால்தீன் சமர்ப்பித்துள்ளார்-

(ரி-223)

## புனித ஹஜ் கடமை நிறைவேற்ற இம்முறை மலையகத்திலிருந்து பலர்

ஹேவாஹெட்ட, ஜூன் 3

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இம்முறை மலையகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் தயாராகி வருகின்றனர்.

கண்டி, மாத்தளை, அக்குறணை, மடவளை, கட்டுகஸ்தோட்ட, உடுதெணிய, கம்பளை, தெல்தோட்டை முதலிய இடங்களில் இம்முறை பெருந்தொகையானோர் ஹஜ் செய்யவுள்ளனர்.

ஹஜ் செல்லவுள்ளோரை ஒன்று சேர்க்கும் பணியில் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் பிரயாண முகவர்கள் இப்பகுதிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கண்டி நகரில் பல இடங்களிலும் மேற்படி ஹஜ் பிரயாண முகவர் நிலையங்கள் தற்சமயம் செயல்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

(ரி-099)

## கடுகம்மையில் வீடமைப்பு திட்டம்

வெலிகாமம், ஜூன் 4

தெவிநுவர தொகுதி கடுகம்ம பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரியின் மாத்தறை மாவட்ட அலுவலகம் இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாத்தறை மாவட்ட எம் பி திரு மஹிந்த விஜேசேகராவின் வேண்டுகோளை அடுத்தே இத்திட்டம் நிறுவப்பட இருக்கிறது. (ஐ-331)

# விமான சேவைகள்



| ஜூன் 5 (செவ்வாய்க்கிழமை) | | |
|---|---|---|
| வந்து சேரும் நேரம் | | |
| 0030 சென்னை | யூ எல் | 122 |

ஜூன் 6 (புதன்கிழமை)

வந்து சேரும் நேரம்

வானொலி

7-00 இளைஞர் மன்றம் — த தேவதாஸ்
7-30 முஸ்லிம் இசைப்பாடல்கள்
7-50 உலகச்செய்திகள்

10-20 தாவரவியல் — சிங்களம்
10-45 ரசாயனவியல் — தமிழ்
11-10 மிருகவியல் — தமிழ்
11-35 என எச் கே ஃபில்

## ஜூன் 5 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0030 | சென்னை | யூ எல் 122 |
| 0610 | சூரிச், சார்ஜா, மாலைதீவு | பி பி 602 |
| 0640 | மஸ்கட் | யூ எல் 210 |
| 0700 | அபுதாபி, மஸ்கட் | ஜி எப் 4144 |
| 0800 | டுபாய் | ஈ கே 800 |
| 0915 | குவைத் | யூ எல் 228 |
| 1020 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை, பம்பாய் | ஐ சி 573 |
| 1210 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல்இசட் 595 |
| 1405 | திருவனந்தபுரம் | யூ எல் 162 |
| 1555 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1755 | பம்பாய், சென்னை | ஐ சி 586 |
| 2050 | கராச்சி, மாலைதீவு | பி கே 774 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2230 | பாங்கொக், அபுதாபி சோபியா | எல்இசட் 596 |
| 2315 | சென்னை | யூ எல் 122 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் 503 |
| 0715 | சூரிச், சார்ஜா, மாலைதீவு | பி பி 602 |
| 0730 | திருச்சி | யூ எல் 131 |
| 0815 | அபுதாபி, மஸ்கட் | ஜீ எப் 4144 |
| 0915 | டுபாய் | ஈ கே 800 |
| 1115 | திருவனந்தபுரம் | யூ எல் 161 |
| 1200 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1235 | சென்னை, பம்பாய் | ஐ சி 573 |
| 1315 | சோபியா, அபுதாபி, பாங்கொக் | எல்இசட் 595 |
| 1730 | ரியாத் | யூ எல் 271 |
| 1840 | பம்பாய், சென்னை | ஐ சி 586 |
| 1945 | சென்னை | யூ எல் 121 |
| 2200 | கராச்சி, மாலைதீவு | பி கே 774 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2330 | பாங்கொக், அபுதாபி, சோபியா | எல்இசட் 596 |

## ஜூன் 6 (புதன்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0540 | ரியாத் | யூ எல் 272 |
| 0635 | குவைத் | கே யூ 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் 504 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன், கராச்சி | கே எல் 801 |
| 0745 | ஜித்தா, பஹ்ரேன், ரியாத் | எஸ் வி 346 |
| 0845 | டுபாய், மாலைதீவு | ஈ கே 802 |
| 1120 | திருவனந்தபுரம் | யூ எல் 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி 307 |
| 1345 | மாலைதீவு, டுபாய் | ஈ கே 803 |
| 1545 | சென்னை | யூ எல் 122 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2025 | மாலைதீவு | யூ எல் 102 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0125 | டுபாய், சூரிச், லண்டன் | யூ எல் 523 |
| 0750 | குவைத் | கே யூ 361 |
| 0830 | திருவனந்தபுரம் | கே எல் 801 |
| 0915 | ஜித்தா, தஹ்ரேன், ரியாத் | எஸ் வி 346 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 0950 | டுபாய், மாலைதீவு | ஈ கே 802 |
| 1215 | சென்னை | யூ எல் 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி 308 |
| 1450 | மாலைதீவு, டுபாய் | ஈ கே 803 |
| 1755 | பம்பாய், கராச்சி | யூ எல் 181 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன் சிப்பல் | கே எல் 802 |
| 1920 | அபுதாபி, குவைத் | யூ எல் 223 |
| 1930 | மாலைதீவு | யூ எல் 101 |
| 2115 | புக்கியோகா, நொரிடா | யூ எல் 656 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ், எஸ் யூ — ஏரோபுளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ், டி ஜி — தாய் எயர் வேய்ஸ். பி பி பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி பிரத்தியேக சேவை. டி கே — பிரத்தியேக சேவை, கே எல் — றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 452218, (விமான நிலையம்)

பணம் செய்து வைத்தார்.

(ரி-331)

## பலாங்கொடை பாபல்கஹா மின் விநியோக திட்டம்

பலாங்கொடை, ஜூன் 3

"வசதி படைத்தவர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதை விட வசதியற்றவர்களுக்கு போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதே எனது நோக்கமாகும். இந்த கிராமத்திற்கு மின்சாரத்தைப் பெற கடந்த 12 வருட காலமாக நீங்கள் மேற்கொண்டு வந்த முயற்சிகளை நான் நன்கறிவேன். இன்று உங்களது நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்"

மேற்கண்டவாறு சப்ரகமுவ மாகாண சபையில் ஆளும் கட்சி (ஐ தே க) அங்கத்தவரான திரு வெஹல்லடன் பொனஸேகா பலாங்கொடை தொகுதியைச் சேர்ந்த "பாபல்கஹா" கிராமத்திற்கான மின் விநியோகத் திட்டத்தை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்கு பலாங்கொடை புத்த ஜயந்தி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வண பலாங்கொடை நந்த தேரோ தலைமை வகித்தார்.

சப்ரகமுவ மாகாண சபை அங்கத்தவர் (ஐ சோ மு) திரு ஏ விஜயம் பேசுகையில், "நாம் அரசியல் ரீதியில் மாறுபட்ட கருத்துடையவன், என்றாலும் மக்களுக்குப் பயன்தரக் கூடிய திட்டங்களை வரவேற்பதாகவும், "மக்கள் சேவை மகேசன் சேவை" என்றும் அதில் அரசியலுக்கோ மற்றும் பேதங்களுக்கோ இடமில்லை" என்று குறிப்பிட்டார்.

(ரி-038)




5—6—1990

காலை
- 5-00 நாதாஞ்சலி
- 5-05 தோத்திரமாலை — மூகாம்பிகா சுப்ரபாதம்
- 5-30 பாமாலை — காமாக்ஷி அம்மன் திருவிருத்தம்
- 5-45 சைவமறைசிந்தனை
- 5-50 இஸ்லாமிய நற்சிந்தனை — மௌலவி எம் எல் எம் யூசுப்
- 5-55 பக்திப்பாடல்
- 6-00 வர்த்தகசேவை
- 6-30 செய்திகள்
- 6-40 செய்தித்தாள் கண்ணோட்டம்
- 6-50 அறிவிப்புகள்
- 7-00 வர்த்தகசேவை
- 7-30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி
- 7-45 மாகாணச்செய்திகள்
- 7-50 வர்த்தகசேவை
- 8-00 நாதவினோதம்
- 8-15 மெல்லிசைப்பாடல்கள்
- 8-30 நெஞ்சோடு நெஞ்சம் மாதர் மஜ்லிஸ் — யூ எல் எஸ் அப்பாசியா
- 9-00 வர்த்தகசேவை

பகல்
- 10-00 இசையமுதம்
- 10-30 பாட்டு — தேவகி குணரத்தினம்
- 11-00 வீணைக்கச்சேரி சிட்டி பாபு
- 12-00 வர்த்தகசேவை
- 12-45 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 வர்த்தகசேவை

மாலை
- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 வைசநெறி
- 6-30 பொலிஸாரும் நாமும்
- 6-45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி
- 7-00 இளைஞர் மன்றம் — த தேவதாஸ்
- 7-30 மெல்லிசைப்பாடல்கள்
- 7-50 உலகச்செய்திகள்

இரவு
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள் —
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள் —
- 8-00 தாஜுமதுலகுர்ஆன்
- 8-05 உரையாடல் குத்பா. பிரசங்கங்கள் தக்வா. வின் அடிப்படையில் அமைதல் அவசியம்" நடத்துபவர்; மௌலவி ஏ எல் எம் இப்றாஹிம்
- 8-25 முஸ்லிம் செய்திகள்
- 8-30 நாடகம் "நடுக்கடல் மனிதர்கள்" எழுதியவர்: யு எல் எம் அதீக்
- 8-55 வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும்
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்
- 9-20 பக்திப்பாடல்கள்
- 9-30 "ஐக்கிய நாடுகள் சுற்றாடல் தினம்" பற்றிய கலந்துரையாடல்
- 10-00 தாளவாத்தியக்கச்சேரி — ஆர் யோகராஜா — மிருதங்கம்
- 10-30 மெல்லிசைப்பாடல்கள்
- 10-45 பஜன்
- 11-00 ஒலிபரப்பு முடிவு



5—6—1990

### ரூபவாஹினி

கல்வி ஒளிபரப்பு
- 9-25 நிகழ்ச்சி நிரல்
- 9-30 பி பி சி கல்வி நிகழ்ச்சி
- 9-55 பௌதிகவியல் — சிங்களம்
- 10-20 தாவரவியல் — சிங்களம்
- 10-45 ரசாயனவியல் — தமிழ்
- 11-10 விருகவியல் — தமிழ்
- 11-35 எல எச் கே ஸ்டில், செக்மென்ற்
- 12-00 ஒளிபரப்பு முடிவு.

பி ப
- 4-30 உதைபந்த பாடசாலை
- 5-00 செய்திகள் — சிங்களம்
- 5-15 சிறுவர் களஞ்சியம்
- 5-30 மனையின் பாதுகாவலர் — கருத்துப்படம்
- 6-00 முழுமணிகளுக்கு அஞ்சலி
- 6-10 பொசன் சிந்தனை
- 6-15 ஹஜ் யாத்திரை 1990
- 6-30 செய்திகளும் காலநிலை அறிக்கையும் — தமிழ்
- 7-00 கலை அரங்கம்
- 7-30 பிரதிசார
- 8-00 செய்திகளும் — காலநிலை அறிக்கையும் — சிங்களம்
- 8-30 ஓஷின் — ஜப்பானிய ரெல் நாடகம்
- 9-05 சமபத் ரேகா
- 9-30 செய்திகளும் — காலநிலை அறிக்கையும் — ஆங்கிலம்
- 10-00 த வேர்ல்ட் ஒஃப் பப்பற்றி
- 11-00 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

பி ப
- 5-59 நிகழ்ச்சி நிரல்
- 6-00 முழுமணிகளுக்கு அஞ்சலி
- 6-15 ஈராக்கிலிருந்து திரைப்படம் — விவரணம்
- 6-30 செய்திகள் — சிங்களம்
- 7-00 இ சலமப்
- 7-30 ஃபான் கிளப்
- 8-00 நியு ஒட் கூப்பின்
- 8-30 பழைமையைத் தேடி
- 9-00 நிக்காடோ விசி பொ
- 9-30 இசை நிகழ்ச்சி
- 10-00 செய்திகள் — ஆங்கிலம்
- 10-25 நிகழ்ச்சி நிரல்
- 10-26 ஐ டி என் 11 ஆவது இசை நிறைவு தினம் பிரித் நிகழ்ச்சி
- 11-30 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# கிராமப்பகுதிகளில் சிறந்த நிர்வாக சேவைக்கு ஏற்பாடு

பன்னலை, ஜுன் 3

கிராமப் பிரதேசங்களில் சிறந்த நிர்வாக சேவை நடைபெறுவதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இதுபற்றிக் கூறினார்.

குருநாகல் குடுகமுபன பன்னல சனசமூக நிலையத்தில் வடமேல் மாகாண சபை முதல் அமைச்சர் திரு காமினி ஜெயவிக்ரம பெரேரா தலைமையில் அண்மையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

நாட்டு மக்களுக்கு சிறந்த நிர்வாகத்தைப் பெற்றுக் கொடுக்க கிராம சேவகர் பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கிராம சேவகர்கள், உதவி அரசாங்க அதிபர்களிடம் இருந்து நாட்டு மக்கள் சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் நாட்டின் நிர்வாக சேவையில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

வடமேல் மாகாண சபை முதல் அமைச்சர் திரு காமினி ஜெயவிக்ரம பெரேரா பேசுகையில் கூறியதாவது—

மாகாண சபைத் திட்டத்தின் கீழ் குருநாகல் புத்தளம மாவட்ட மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக்க வடமேல் மாகாண சபை நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

குருநாகல், புத்தளம மாவட்டங்களில் கிராம சேவகர் பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இப்படி அவர் கூறினார்.

(எ-138)

## கருணாநிதிக்கு 67 வயது

சென்னை ஜுன் 4

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி 67-வது பிறந்த தினத்தை முன்தினம சென்னையில் எளிமையாகக் கொண்டாடினார்.

[இ-கு]




## கொமெய்னியின் முதலாம் ஆண்டு நினைவு

இமாம கொமெய்னியின் முதலாம ஆண்டு நினைவை முன்னிட்டு நேற்று முன்தினம மருதானை ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் முஸ்லிம லீக் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம சி எம கலீல் தலைமை வகித்துப் பேசுவதைக் காணலாம—

ஈரானில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள தூதுக் குழுவினரும, வண அரமமதர்மலோக்க தேரர், ஈரான் தூதரகப் பொறுப்பதிகாரி அப்துல் ரெஸா பராஜி ராட் உட்பட மற்றும பல பிரமுகர்களும மேடையில் அமர்ந்து இருப்பதையும படத்தில் காணலாம

[படம; அநுரா குணசேகரா]

# இஸ்லாத்துக்கு எதிராக சதி: ஒற்றுமை மூலம் முறியடிக்கலாம்

## ஈரான் தூதுக் குழுவின் தலைவர் உரை

கொழும்பு, ஜுன் 4

இன்று இஸ்லாத்துக்கு எதிராக சதித் திட்டம திட்டப்படுகிறது- இதனை முஸ்லிமகள் முறியடிக்க வேண்டும—

ஒற்றுமையாக வாழ்வதன் மூலமே இஸ்லாத்தின் விரோதிகளை முறியடிக்க வழி பிறக்கும—

ஈரான் இஸ்லாமியக் குடியரசில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள "அஹ்லுஸ் ஸுன்னா" தூதுக் குழுவின் தலைவர் அப்துல் ரஸாக் ரஹ்பர இவ்வாறு கூறினார்—

ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் ஸ்தாபகரான ஆயதுல்லா கொமெய்னியின் நினைவு தினக் கமிட்டியும இக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன—

### தினேஷ்

மஹஜன எக்சத் பெரமுன தலைவர் திரு தினேஷ் குணவர்தன (எம பி) பேசுகையில் கூறியதாவது—

ஈரானின் இருண்ட யுகத்தைப் போக்கி புரட்சியின் மூலம இமாம கொமெய்னி புத்தெழுச்சியை உருவாக்கினார்—

இப் புரட்சி ஆசியாவிலும, ஈரானிலும அரசியல் நிலைமைகளை மாற்றியது—

ஈரான் புரட்சி ஏனைய உலகப் புரட்சியை போன்ற ஒன்றல்ல அது வரலாற்றில் முக்கிய புரட்சி கொமெய்னியை நாம காண்கிறோம— வரலாற்று ரீதியாக நோக்கும போது இந்தியா, இலங்கை, ஈரான் ஆகிய நாடுகளில் இருப்பவர்கள் முன்னைய காலத்தில் ஒரே நாட்டில் இருந்தவர்கள் என்பது புலனாகும—

ஈரான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் கலாசாரப் பண்பாடுகளுக்கு இடையில் ஒற்றுமை காணப்படுகிறது—

இந்த மூன்று நாடுகளும சங்கிலித் தொடர் போல் பிணைந்தவையாகும—

இமாம் கொமெய்னி மறைந்தாலும அவரின் கொள்கைகள் உயிரோட்டம உள்ளவையாக எக்காலமும நிலைபெற்றுக் கொமெய்னி இவற்றி கண்டார் ஆத்மீகக் கட்டுப்பாட்டை இமாம் உருவாக்கினார்—

இமாம் கொமெய்னி காட்டிச் சென்றுள்ள பண்புகளை உயிருட்ட வேண்டும என்றார்—

### ஹஸன்

மௌலவி எஸ் எல். எம ஹஸன் (அல் அஸ்ஹரி) பேசுகையில்—

இஸ்லாமிய அரசியல் வாழ்வு முறைகள் உலகம அழியும வரை நிலை பெறும என்பதை இமாம கொமெய்னி வலியுறுத்தினார்

இமாம கொமெய்னி அவர்கள் ரசூலுல்லாஹ்வின் "சுன்னத்"க்களை உயிர்ப்பிக்கும ஒரு பிரதிபிம்பமாக வாழ முனைந்தார்—

உலக முஸ்லிமகளின் குறைகளை நிறைவுபடுத்துவது அவரின் செயற்பாடுகளில் பிரபல்யம பெற்றது—



## இந்திய பல்கலை குழு — ஹமீத் சந்திப்பு

இந்திய அரசாங்கம நூறு பட்டபின் படிப்பு மாணவர்களுக்கும 400 பட்டதாரி மாணவர்களுக்கும புலமைப் பரிசில் வழங்கியிருக்கிறது:

இது தொடர்பான இறுதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக இலங்கை வந்திருக்கும இந்திய அரசாங்க மற்றும் இந்திய பல்கலைக்கழக மானியக்குழு பிரதிநிதிகள், நீதி அமைச்சரும உயர் கல்வித் திட்ட அமைச்சருமான ஏ ஸி எஸ் ஹமீதைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம.

இலங்கை பல்கலை பிரமுகர்களும படத்தில் காணப்படுகின்றனர்—

(எ-ச)

[படம— தம்மிக நிமலசூரிய]

ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் ஸ்தாபகரான ஆயதுல்லா இமாம ருஹுல்லா அல் கொமெய்னியின் முதலாம ஆண்டு நினைவுப் பொதுக் கூட்டம நேற்று முன்தினம கொழுமபு மருதானை ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் உரையாற்றும போதே அப்துல் ரஸாக் ரஹ்பா இவ்வாறு கூறினார்.

முஸ்லிம லீக் தலைவர் அல் ஹாஜ் டாக்டர் எம சீ எம கலீல் தலைமை வகித்தார்.

ஈரான் தூதரகமும இமாம கொமெய்னி ஞாபகார்த்தக் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்தில் இமாம் கொமெய்னியின் புரட்சி ஏனைய புரட்சியை போன்ற ஒன்றல்ல அது வரலாற்றில் முக்கிய புரட்சியாகும.

மக்களின் போராட்ட புரட்சியாகும.

இமாம் கொமெய்னியை தற்கால உலகம மட்டுமல்ல மூன்றாம உலகமும என்றென்றும நினைவுகூரும.

வருங்கால தலைமுறையினரும என்றென்றும நினைவுகூருவர் என்றார்.

## தேரர்

மருதானை சிதாராம விகாரையின் பிரதம குருவான வண ஆரம்ம தர்மாலோக்க தேரர் பேசுகையில் கூறியதாவது:

ஈரானின் மீட்பராக இமாம் உயிரோட்டம உள்ளவையாக எக்காலமும நிலைபெற்றுத் தொடரும.

இது திண்ணம என்றார்.

## ஷாகுல் ஹமீத்

அல்ஹாஜ் ஏ எம ஷாஹுல் ஹமீத் பேசுகையில் கூறியதாவது:

உலக சரித்திரத்திலேயே ஒரு நிலையான இடத்தை இமாம் கொமெய்னி பெற்றுக் கொண்டவர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இமாம் கொமெய்னி விரட்டி அடித்தார்.

முஸ்லிம் "உமமா"வை ஒன்றுபடுத்துவதில் இமாம் கொமெய்னி நிறைவுபடுத்துவது அவரின் செயற்பாடுகளில் பிரபல்யம பெற்றது.

எதிர்ப்புக் கணைகளை எல்லாம அவர் எளிதாக சமாளித்தார்.

இரத்தத்தோடு இஸ்லாமிய உணர்வைக் கலந்து ஊட்டினார்கள். இஸ்லாமதான் எமது உயிர் என்று சங்கநாதம எழுப்பினார்.

இஸ்லாமிய அடிப்படையிலான அரசியலை இமாம கொமெய்னி எமக்குத் தந்தார் என்றார்.

ஈரான் தூதரகப் பொறுப்பதிகாரி அப்துல் ரெஸா பராஜிராட் நன்றியுரை நிகழ்த்தினார்

அல்ஹாஜ் பீ எம யூசுப் "துஆ"ப் பிரார்த்தனை நடத்தினார்.

ஜனாப் எம எல் ஏ எம ஹிஸ்புல்லா (எம பி), ஜனாப் ஹலீம இஷாக் (எம பி), உட்பட மேலும் முஸ்லிம பிரமுகர்களும முஸ்லிம இயக்கங்களின் பிரமுகர்களும பொது மக்களும கூட்டத்தில் பங்குபற்றினர்.

இமாம கொமெய்னியின் வாழ்வுடன் தொடர்பான விவரணப் படமும இங்கு காண்பிக்கப்பட்டது.

[இ-007]

அரசாங்க மற்றும் இந்திய பல்கலைக்கழக மானியக்குழு பிரதிநிதிகள், நீதி அமைச்சரும உயர்

[படம- தம்மிக நிமலசூரிய]

## காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நீங்கும்

தற்போது நிலவும 13 கிலோ 2½ கிலோ காஸ் சிலிண்டர்களின் தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும. இதற்காக வெளிநாட்டில் இருந்து சிலிண்டர்கள் [illegible] இறக்குமதி செய்யப்படும்.

இவ்வாறு காஸ் மற்றும நீர் உற்பத்தி நிறுவனத்தின் [illegible] வாய்ந்த அதிகாரி திரு எஸ் துல்ப்பஹேவா தெரிவித்தார்.

13 கிலோ, 2½ கிலோ காஸ் சிலிண்டர்களுக்கு தற்போது பெரும தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது சமபந்தமாக கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தட்டுப்பாட்டினால் [illegible] காஸ் சிலிண்டர்களை பெற விரும்புவோர் பெரும சிரமத்துக்கு ஆளாகி உள்ளனர்.

அத்துடன் பாவனையாளர்களும இது தொடர்பாக பெரும சிரமத்துக்குள்ளாகி இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

(இ-மு)




இப்பத்திரிகை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை, கொழுமபு 12, இலங்கை, தபால் பெட்டி இல 1613, வெளியிட்ட திகதி: 8 ஜூன் 1990.
DINAPATHI 5 Gunasena Mawatha, Colombo— 12 P O Box 1612